வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 12.03.2022 சனிக்கிழமை இதழ் : 97 பக்கங்கள் : 16

# ஜனாதிபதியின் பேச்சு அழைப்பை நிராகரிக்கக் கோருகிறது ரெலோ!

## சம்பந்தனுக்கு அடைக்கலநாதன் கடிதம்!

மன்னார், மார்ச் 12

தமிழ் தேசிய கூட்டமைப்பை சந்தித்துப் பேசுவதற்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பை நிராகரிக்குமாறு கோரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனுக்கு தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். 15



## பா.ஜ.கவின் தமிழக தலைவரை சந்தித்தார் சுமந்திரன் எம். பி.!

சென்னை, மார்ச் 12

உலக தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களின் ஒன்றுகூடலுக்காக தமிழகம் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பாராளு மன்ற உறுப்பினர் 15

## பெற்றோல் ரூ. 254, டீசல் ரூ. 176 விற்பதற்கு நிதி அமைச்சு அனுமதி!

கொழும்பு, மார்ச் 12

பெற்றோலின் விலையை ஒரு லீற்றர் 77 ரூபாயாலும், டீசலின் விலையை 55 ரூபாயாலும் அதிகரிப்பதற்கு நிதி அமைச்சு அனுமதியளித்துள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் பெற்றோல் 254 ரூபாயாகவும், ஒரு லீற்றர் டீசல் 176 ரூபாயாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இதேவேளை, ஒரு லீற்றர் சுப்பர் பெற்றோலின் (95 ஒக்ரெய்ன்) விலை 283 15

## நாணய நிதிய பிரதானிகள் திங்கள் கொழும்பு வருவர்

கொழும்பு, மார்ச் 12

சர்வதேச நாணய நிதியத்தின் இரு பிரதானிகள் நாளை மறுதினம் திங்கள் கிழமை இலங்கை வரவுள்ளனர்.

இலங்கை அரசால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரமே அவர்கள் இங்கு வருகின்றனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிதி அமைச்சர் பஸில் ராரஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினருடன் பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளனர். (அ)

## சுமந்திரனுக்கு எதிர்ப்பு

சென்னை, மார்ச் 12

தமிழகம் சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் எம்.பியின் வருகையை எதிர்த்து சென்னையில் கறுப்புக் கொடி போராட்டம் நடைபெற 15

# விலையேற்றங்களால் நாடு நெருக்கடிக்குள்!

## பொதுமக்கள் பெரும் திண்டாட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 12

டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி ஒரேநாளில் ரூ. 259ஆக உயர்ந்ததைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகளவு உயர்ந்துள்ளன. இதனால், பொருட்களை கொள்வனவு செய்யமுடியாத நிலையில் மக்கள் திண்டாடி வருகின்றனர். இந்நிலையில், நாடு முழுவதும் பெரும் நெருக்கடி நிலையும் ஏற்பட்டுள்ளது. 15

## மீண்டும் எகிறுகிறது பால்மாவின் விலை!



கொழும்பு, மார்ச் 12

பால்மாவின் விலை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரித்ததன் காரணமாக இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 15



## உணவு பொதியின் விலையும் உச்சம்!

கொழும்பு, மார்ச் 12

உணவுப் பொதியின் விலை நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் 20 முதல் 30 ரூபாய் வரையில் அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர் சங்கம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது. மேலும், கொத்து ரொட்டியின் விலையை 10 முதல் 15 ரூபாவினால் 15

## கோதுமை மாவின் விலை கிலோவுக்கு ரூ.35 உயர்வு



கொழும்பு, மார்ச் 12

ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 35 ரூபாயினால் அதிகரிப்பதாக செரண்டிப் கோதுமை மா விநியோக நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த புதிய விலை 15

## பாண் விலையும் உயர்வு



கொழும்பு, மார்ச் 12

பாண் உட்பட அனைத்து பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளையும் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது என அனைத்து இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே.ஜெயவர்த்தன அறிவித்துள்ளார். 15

## மருந்துகளின் விலை 29 வீதத்தால் உயர்வு



கொழும்பு, மார்ச் 12

கடந்த சில நாட்களாக டொலருக்கான ரூபாயின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக மருந்துகளின் விலையை 29 வீதத்தால் அதிகரிக்க தேசிய ஒளடத கூட்டுத்தாபனத்தின் விலை கட்டுப்பாட்டு குழுவில் தீர்மானித்துள்ளது என்று ஒளடத 15

## பஸ் கட்டணமும் 30 வீதம் உயரும்?

கொழும்பு, மார்ச் 12

எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து பஸ் கட்டணத்தை திருத்தியமைக்குமாறு பேருந்து சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஆகக் குறைந்த பஸ் கட்டணமாக 30 ரூபாய் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் பஸ் கட்டணம் 30வீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் தனியர் பஸ் 15



# த. தே. கூட்டமைப்பில் கிறிஸ்தவ மேலாதிக்கம்!

## மறவன்புலவு சச்சிதானந்தம் சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஜனாதிபதியை சந்திக்கவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் 12 வீத கிறிஸ்தவர்களின் சார்பில் 40 வீத பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். சைவர்களை கிறிஸ்தவர்கள் அடக்கியாள்கின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார சிவ சேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன்.

அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையிலேயே இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை குடியரசுத் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ அழைத்திருக்கிறார். தமிழரின் அரசியல் எதிர்காலம் குறித்துப் பேச வாருங்கள் என அழைத்திருக்கிறார். இந்திய பிரதமர் வரும் முன்பு அழைத்திருக்கிறார்.

இலங்கைத் தமிழர் தேசிய பரப்பில் 87வீத சைவர். 12 வீத கிறித்தவர். ஏனையோர் 1வீதத்தினர். மலையகம், கிழக்கு, வடமேற்கு, வடக்கு எனத் தமிழ்த் தேசிய பரப்பின் வாழ்விடங்கள். மரபுவழி வாழ்விடங்கள்.

கிழக்கின் சம்பந்தன் தலைமையில், வடக்கின் சேனாதிராசா, அடைக்கலநாதன் சித்தார்த்தன், சுமந்திரன் ஆகியோர் குடியரசுத் தலைவரைச் சந்திப்பர். இந்த ஐவர் குழுவில் இருவர் கிறிஸ்தவர்.

87 வீத சைவர் சார்பில் குழுவில் 60வீத சைவரும் 12வீத கிறிஸ்தவர் சார்பில் குழுவில் 40 வீத கிறிஸ்தவரும் அடங்குவர்.

இந்தச் சந்திப்பில் சைவரான அம்பாறை கலையரசன் இல்லை. மலையக சைவரான இராதா கிருஷ்ணனும் இல்லை. தமிழர் தேசியப் பரப்பில் விரிந்துள்ள பூதாகரமான பிரச்னைகளுள் சைவர்களுக்கு பௌத்தர்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களால் எழுகின்ற பிரச்னைகளே பெரும் பிரச்சினைகள்.

திருக்கேதீஸ்வர வளைவு உடைப்புடன் மன்னாரில் 37 இடங்களில் கத்தோலிக்கரின் இந்து சமய அழிப்பு என்பனவற்றை வெற்றிகரமாக நிகழ்த்தி முடித்த மன்னார் ஆயரின் சார்பில் செல்வம் அடைக்கலநாதன் குழுவில் இருக்கிறார். மலையகத்தில் இரு தசாப்தங்களின் முன் 100 கிருத்துவர்கள். இன்று 145 கிறிஸ்தவர்கள். வடக்கில் இரு தசாப்தங்களின் முன் 9வீத கிறித்தவர். இன்று 19வீத கிறித்தவர். மத மாற்றிகள் அட்டூழியத்தைச் சைவர் தாங்க முடியாமல் தவிக்கின்றனர். மதமாற்றிகள் சார்பில் குழுவில் சுமந்திரன் இருக்கிறார்.

தமிழ்த் தேசிய பரப்பில் புதிது புதிதாக மசூதிகள், தேவாலயங்கள், விகாரங்கள் அமைந்து வருகின்றன. பௌத்தர், முஸ்லிம் கிறிஸ்தவர் இல்லாத இடங்களில் எல்லாம் அமைந்து வருகின்றன. சைவர்களுக்கு தமிழ்த்தேசிய பரப்பில் நடைபெறும் அட்டூழியங்களை எடுத்துச் சொல்ல முடியாது பெருகி வருகின்றன.

குடியரசுத் தலைவரைக் காணச் செல்லும் ஐவர் குழுவில் உள்ள 60வீத சைவரையும், தமிழ்த் தேசியப் பரப்பில் சைவர்களுக்கு எதிராக நடைபெறும் அட்டூழியங்களைச் சொல்ல விடாது 40வீத கிறிஸ்தவர் அடக்கி வைத்திருக்கின்றனர்.

கிறித்தவ மேலாதிக்கத்தின் உடனான அதிகாரப் பரவலாக்கத்தால் சைவர்களுக்குத் தீமையே விளையும். சைவர் மீதான கிறித்துவ மேலாதிக்கத்தை உறுதி செய்யத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஐவர் குழுவில் 40வீத கிறிஸ்தவர் குடியரசுத் தலைவரைச் சந்திக்கச் செல்வதை வன்மையாக கண்டிக்கிறேன்.

கலையரசனையோ, குகதாசனையோ, இராதாகிருஷ்ணனையோ சேர்த்து நால்வரும் கிறித்தவர் ஒருவருமான ஐவர் குழுவாகக் குடியரசுத் தலைவரைத் தமிழ்த் தேசியப் பரப்புச் சார்பாகச் சந்திக்கச் செல்வதையே இலங்கைச் சைவர்கள் போற்றுவார்கள் - என்றுள்ளது. (ஐ)

# கணனி கற்கை பயிற்சி நெறி!

யாழ்ப்பாணம், மார்ச் 12

சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் இயங்கும் கணனி கற்றல் நிலையத்தால் க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மற்றும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்காக 3 மாதகால கணனிக் கற்கை பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் பங்கேற்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை பாடசாலை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்று பாடசாலை அதிபர் எம். முரளிதரன் அறிவித்துள்ளார். (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 12

ஐக்கிய இராச்சியத்தின் அறிவு அறக்கட்டளையின் ஆதரவில் கம்பவாரிதி ஜெயராஜின் “அறத்தால் வருவதே இன்பம்“ எனும் தலைப்பில் மாணவர்களின் உளவளர்ச்சி கருதிய சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் இ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவும், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரனும் பங்கேற்கின்றனர்.

மேலும், இந்த நிகழ்வில் பசுமையைப் பேணுவோம் என்ற தலைப்பில் நி. ஷவித்தா என்ற மாணவி உரை நிகழ்த்தவுள்ளார்.

கம்பவாரிதி ஜெயராஜின் சொற்பொழிவைத் தொடர்ந்து மாணவர்கள் கேள்வி பதிலும் இடம்பெறும். (ஐ)

# பெண்கள் தின நிகழ்வு இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 12

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டம் “முயற்சியால் முன்னேறும் மகளிர் அணியாவோம்“ என்ற தொனிப் பொருளில் நடத்தும் மகளிர் தின நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆனைக்கோட்டை முதியோர் சங்க முன்றலில் மரிய றோசறி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் அருட்பணி இயூஜின் பிரான்சிஸ் பிரதம விருந்தினராக பங்கேற்கிறார்.

இந்த நிகழ்வில் அனைவரையும் பங்கேற்குமாறு ஏற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# வீட்டின் கூரை பிரித்து 10 பவுண் நகை களவு!

வடமராட்சி, மார்ச் 12

வீட்டின் கூரை பிரித்து நுழைந்து 10 பவுண் நகைகளும் 40 ஆயிரம் ரூபாய் பணமும் திருட்டுப் போயுள்ளன.

கரவெட்டி கிழக்கு - கிழவித் தோட்டம் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்றுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வீட்டில் எவருமில்லாத சமயம் பார்த்து வீட்டின் கூரையைப் பிரித்து நுழைந்தவர்கள் வீட்டை சல்லடைபோட்டு தேடி 10 பவுண் நகைகள், 40 ஆயிரம் ரூபாய் பணம் என்பவற்றை களவாடி சென்றுள்ளனர்.

கோயிலுக்கு சென்று விட்டு வீட்டுக்கு திரும்பியவர்கள் பொருட்கள் சிதறியிருப்பதைக் கண்டு பொருட்களை பரிசோதித்தபோதே நகை, பணம் களவுபோனமை தெரிய வந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-2)

# இப்படியும் நடக்கிறது...!

டொலர் நெருக்கடி என்கிறார்களே, அது ஏன் இவ்வளவு தொடராக இழுபடுகின்றது என்பதை அறிய ஊர்க்குருவிக்கும் விருப்பம் இருக்காதா என்ன?

இது ஒரு பொருளாதார ஆராய்ச்சி அல்ல. சாதாரணமாக நாம் அறிந்துகொள்ள வேண்டியதுதான்.

இலங்கை மத்திய வங்கி எப்போதும் டொலர் கையிருப்பாக நான்கு, ஐந்து பில்லியன் டொலர்களை வைத்திருப்பதுண்டு.

நாட்டுக்கு வருமானமாகக் கிடைக்கும் டொலர்களின் அளவும், இறக்குமதிக்கும் கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும் தேவையான டொலர்களின் அளவும் அண்ணளவாக ஒன்றாக இருந்தால் மாத்திரமே நாட்டின் கையிருப்பு தொடர்ந்து இருந்துகொண்டிருக்கும்.

சுற்றுலாத்துறையையும் ஏனைய ஏற்றுமதி வருமானத்தையும் விட, புலம்பெயர்ந்த மக்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பில் சென்ற தொழிலாளர்கள் அனுப்பும் பணமுமே இலங்கையின் டொலர் வருமானமாக கிடைக்கின்றது.

கடந்த இரண்டாயிரத்து பதினெட்டாம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் கிடைத்த வருமானம் மாத்திரம் சுமார் ஐந்து பில்லியன்கள். ஆனால், பத்தொன்பதில் ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து முற்றாக தடைப்பட்ட சுற்றுலாத்துறை, அதன் பின்னர் தொடர்ந்து இரண்டு வருடங்கள் கொரோனாவால் செயலிழந்திருந்தது.

ஆனாலும் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்காகவும், ஏனைய எரிபொருள் போன்ற அத்தியாவசிய பொருட்களுக்காகவும் இறக்குமதிக்கு தேவையான டொலர்களை பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டபோது, நாட்டின் டொலர் கையிருப்பு குறைந்தது என்பதைவிட, இல்லாமலே போய்விட்டது எனலாம்.

அந்த நெருக்கடி ஆரம்பித்தபோது, அத்தியாவசியமற்ற பொருட்களை இறக்குமதி செய்வதை தடைசெய்வதற்கு பதிலாக, பணத்தைச் செலுத்தாமல் ஆறு மாத கடன் அடிப்படையில் மட்டும் பொருட்களை இறங்குமதி செய்ய அரசு அனுமதி வழங்கியிருந்தது.

அவ்வாறு செய்யும்போது ஆறு மாதங்களில் நாட்டுக்கு தேவையான டொலர் வருமானம் கிடைத்துவிடும் என்பது அரசின் எதிர்பார்ப்பாக இருந்திருக்கவேண்டும்.

ஆனால், இதனை பயன்படுத்திய இறக்குமதி வர்த்தகர்கள் தாராளமாக பொருட்களை இறக்குமதி செய்துகொண்ட அதே வேளையில், அதற்குரிய பணத்தை ‘ஹவாலா’ என்ற சட்ட விரோத பணப்பரிவர்தனை மூலம் அனுப்பிவந்தனர்.

இந்த ஹவாலா எப்படி செயல்படுகின்றது என்பதை அறிய வாசகர்களான உங்களுக்கும் ஆவல் இருக்கலாம். இது ஊர்க்குருவிக்கும் ஏற்பட்டதால் அது தொடர்பாக தெரிந்த ஒருவருடன் பேசினேன்.

இலங்கையில் இருக்கும் ஒருவருக்கு சீனாவிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்ய பத்தாயிரம் டொலர்கள் அனுப்பவேண்டும் என்றால், அவர் இந்த ஹவாலா முகவர்களை அணுகினால், அவர் சிங்கப்பூரிலிருந்தோ அல்லது ஹொங்கொங்கிலிருந்தோ அனுப்பிவைப்பார். அதற்கு பதிலாக அவருக்கு இலங்கை ரூபாயில் பணத்தைச் செலுத்தினால்போதும்.

இந்த பத்தாயிரம் டொலர் பணத்தை அவர் சிங்கப்பூருக்கோ அல்லது ஹொங்கொங்கிற்கோ இலங்கை ரூபாயாக செலுத்தமுடியாது. இதற்காக அவர் மற்றைய நாடுகளில் உள்ள ஹவாலா முகவர்களை அணுகி இலங்கையிலுள்ளவர்களுக்கு இலங்கை ரூபாய் தேவையெனில் அதனை அவர்களிடம் கொடுத்து, அதற்குரிய டொலர்களையோ யூரோக்களையோ அங்கே பெற்று அதனை, சீனாவுக்கு டொலர் அனுப்பிய தனது முகவரிடம் சேர்ப்பிப்பார்.

இங்கே இவர் தனக்கு தேவையான டொலர்களை வெளிநாடுகளில் பெறுவதற்காக வங்கி மதிப்பைவிட பல ரூபாய்கள் அதிகமாக கொடுப்பார். எவ்வளவு அதிகமாக கொடுக்கிறராரோ அவ்வளவுக்கு அவரிடம் டொலர்களும் அதிகமாக கிடைக்கும்.

அதனால் இந்த ஹவாலா முகவர்கள் தத்தமது தேவை கருதி மிக அதிக விலை கொடுத்து வாங்கத் தொடங்கினார்கள். இலங்கையிலிருந்து இறக்குமதிக்காக பணம் அனுப்பவேண்டியவர்கள் அதிக விலை கொடுக்க தயாராக இருந்தார்கள்.

இலங்கையில் அமெரிக்க டொலர் ஒன்று இருநூற்றி இரண்டு ரூபாயாக மத்திய வங்கி நிர்ணயித்து இருந்தபோது, இந்த ஹவாலாகாரர்கள் இருநூற்றி அறுபது ரூபாய் வரை கொடுத்து டொலர்களை வாங்கினார்கள்.

இதனால் இலங்கைக்கு பணம் அனுப்பும் புலம்பெயர்ந்த இலங்கையர்கள் மற்றும் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களும் ஹவாலா மூலமே பணத்தை அனுப்பத் தொடங்கினார்.

இதனால் அந்த வருமானமும் முற்றாக ஸ்தம்பிதமடைந்துவிட்டது.

இப்போது முந்நூற்று அறுபத்தைந்து பொருட்களுக்கான இறக்குமதிக்கு முற்றாகத் தடைவிதித்ருக்கின்றது அரசு. இதனை எப்போதோ செய்திருக்கவேண்டும் என்கிறார் ஒரு பொருளியலாளர். அப்படி தடைசெய்திருந்தால், பொருட்களை கடன் அடிப்படையில் இறக்குமதி செய்வதாகக்கூறி, ஹவாலா மூலம் பணத்தை அனுப்பி பொருட்களை இறக்குமதி செய்வது நடந்தி ருக்காது. அப்படி நடக்கவில்லை என்றால் ஹவாலா மூலம் டொலர்களை அனுப்பவேண்டிய தேவை இலங்கையர்களுக்கு வந்திருக்காது.

அவ்வாறு தேவை அதிகரித்திருக்காவிட்டால், வெளிநாடுகளில் இருந்து பணம் அனுப்புபவர்களின் பணத்திற்கு அதிக விலையை ஹவாலாக்காரர்கள் கொடுத்திருக்க மாட்டார்கள்.

அவ்வாறு அதிகமாகக் கொடுக்காவிட்டிருந்தால், வழக்கம் போல வங்கிகள் ஊடாகவே பணத்தை அனுப்பிருப்பார்கள். நாட்டுக்கு டொலர் கொஞ்சமாவது வந்துகொண்டிருந்திருக்கும். இந்த ஹவாலாக்காரர்களை அடக்கத்தான் இப்போது டொலரின் பெறுமதியையும் அதிகரித்திருக்கின்றது மத்திய வங்கி. இதனால் விலைகள் மளமளவென்று அதிகரிக்கும். ஆனால், மத்திய வங்கியின் எதிர்பார்ப்பு கைகூடுகின்றதா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

- ஊர்க்குருவி

Eelanadu ஈழநாடு
12.03.2022 சனிக்கிழமை
பிலவ வருடம், மாசி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## கோட்டாபய - கூட்டமைப்பு சந்திப்பு?

கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நீண்ட காலமாக எதிர் பார்த்திருந்த சந்திப்பு இடம்பெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருக் கின்றன. இவ்வாறான செய்திகள் முன்னரும் வெளியாகியிருந்தன. எனினும், கடைசி நேரத்தில் சந்திப்பு பிற்போட்டப்பட்டது. கூட்டமைப் பினரை சந்திப்பதை ஜனாதிபதி கோட்டாபய விரும்பியிருக்கவில்லை. இந்த நாட்டில் - தமிழ் மக்களுக்கென பிரத்தியேக பிரச்னைகள் எதுவுமில்லை என்பதே அவரின் நிலைப்பாடாக இருக்கின்றது. குறிப்பாக, அரசியல் ரீதியான பிரச்னையென்று ஒன்றில்லை என்பதை அவர் தொடர்ச்சியாக தெரிவித்து வந்திருக்கின்றார். இந்த பின்னணியில் - திட்டமிட்டவாறு கூட்டமைப்பு - ஜனாதிபதி சந்திப்பு இடம்பெறுமாக இருந்தால், தமிழ் மக்களுக்கென பிரத்தியேகமான பிரச்னைகள் இருப்பதை ஜனாதிபதி கோட்டபாய ஏற்றுக் கொள்வதாகவே அமையும்.

இந்திய வெளிவிவகார செயலர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இந்த மாதம் வரவுள்ளாரென செய்திகள் வெளியாகியிருக்கின்றன. இதேவேளை பிரதமர் நரேந்திர மோடியும் இலங்கை வரவுள்ளாரென்ற செய்திகளும் வெளியாகியிருக்கின்றன. ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் அமர்வின்போது தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கு 13ஆவது திருத்தச் சட்டம் உள்ளடங்கலாக அதிகாரப் பகிர்வின் மூலமான அரசியல் தீர்வொன்றை காணவேண்டியதன் அவசியத்தை இந்தியா அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தியிருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஜனாதிபதி - கூட்டமைப்பு சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்த சந்திப்பின்போது கூட்டமைப்பின் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்குகொள்ளவுள்ளனர். இந்த சந்திப்பை கூட்டமைப்பு எவ்வாறு பயன்படுத்திக்கொள்ளப் போகின்றது? பொதுவாக சிங்கள ஆட்சியாளர்கள் நெருக்கடியிலிருக்கும்போது தமிழர் தரப்பை நோக்கி வருவதில் ஆச்சரியங்கள் இல்லை. கோட்டாபய அரசாங்கம் எதிர்பார்த்ததை விடவும், அதிக நெருக்கடிகளை சந்தித்து வருகின்றது. பொருளாதார ரீதியான நெருக்கடிகள் ஒருபுறம் என்றால் - மறுபுறமோ பஸில் ராஜபக்ஷவிற்கு எதிராக பங்காளிக் கட்சிகள் அணி திரண்டிருக்கின்றன. ‘மீண்டும் மஹிந்த’ - என்னும் கோசத்தை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டே அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை கொடுக்க முற்படுகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியில்தான் அண்மையில் தேசிய அரசாங்கம் தொடர்பான கதைகளும் உலா வந்தது.

நெருக்கடிகளில் தவித்துக் கொண்டிருக்கும் போதுதான் கூட்டமைப்பின் பக்கமாக ஜனாதிபதி திரும்பியிருக்கின்றார். இந்த சந்தர்ப்பத்தை கூட்டமைப்பு எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளப்போகின்றது என்பது முக்கியமானது. இந்த சந்திப்பின் போது, ஜனாதிபதி பக்கத்திலிருந்து நிச்சயம் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் பேசப்படும். புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டுவருவதன் ஊடாக, அனைத்து பிரச்னைகளையும் தீர்க்க முடியுமென்னும் வாதம் முன்வைக்கப்படலாம். சம்பந்தனும் வழமைபோல் புதிய அரசியல் யாப்பை வரவேற்று கதைகள் சொல்ல முற்படலாம்.

இந்த இடத்தில் பங்காளிக் கட்சிகளின் நிலைப்பாடு என்ன? வழமைபோல் சம்பந்தனுக்கு வழிமொழியும் வேலையை செய்யப் போகின்றனரா - அல்லது, ஜனாதிபதியின் நல்லெண்ணத்தை நிரூபிக்கும் வகையில் சில விடயங்களை செய்து காண்பிக்குமாறு நிபந்தனை விதிக்கப் போகின்றனரா? ஏனெனில், கூட்டமைப்பின் கட்சிகளும் வெளியிலிருக்கும் கட்சிகளும் இணைந்து இந்திய பிரதமர் மோடியின் தலையீட்டை கோரியிருந்தனர்.

இவ்வாறான சூழலில் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது அதற்கு மாறான விடயங்கள் வலியுறுத்தப்படுமாக இருந்தால் - பிரதமர் மோடிக்கான கடிதம் அதன் பெறுமதியை இழந்துபோகும். எனவே, ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது, பிரதமர் மோடியிடம் வலியுறுத்திய அதேவிடயங்களையே கூட்டமைப்பு வலியுறுத்த வேண்டும். ஒருவேளை சம்பந்தன் பின்னடித்தால், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் இதனை வலியுறுத்த வேண்டும். ஒருவேளை கடிதத்திற்கு மாறான விடயங்களை கூட்டமைப்பினர் முன்வைத்தால் மோடி - ஜனாதிபதி சந்திப்பு இடம்பெறும்போது ஜனாதிபதி இந்த விடயங்களை மோடியிடம் வலியுறுத்துவார். கூட்டமைப்பின் மீதான இந்திய கரிசனை மலினப்படும். இறுதியில் ரெலோவும், டி.பி.எல்.எவ் (புளொட்) கட்சிகளின் செயல்பாடுகள் மக்கள் மத்தியில் பரிகசிக்கப்படும். இந்தியாவிடம் கோரும் விடயங்களையே கூட்டமைப்பினர் அரசாங்கத்திடம் கோர வேண்டும். இதன் மூலம்தான் இந்திய அழுத்தத்தைம் தமிழ் மக்கள் மீதான இந்திய கரிசனையும் ஒரே நேரத்தில் பாதுகாக்க முடியும்.

# ஜனாதிபதியுடன் பேச்சு!

**அலசுவது இராஜதந்திரி**

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கும் இடையிலான பேச்சுக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பல தடவைகள் ஜனாதிபதிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சு குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தபோதிலும் தகுந்த வகையில் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை.

இருந்தபோதிலும் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குமிடையே பேச்சுகள் இடம்பெறவிருக்கின்றன எனத்தெரிவிக்கப்பட்டிருப்பது வரவேற்புக் குரியதாகும். இப்பேச்சுகள் இதயசுத்தியோடு இடம்பெற்று சிறந்த முடிவுகளை எட்ட வேண்டுமென்பதே நல்லிணக்கம், நீடித்த சமாதான சகவாழ்வை எதிர்பார்ப்போரின் விருப்பமாக இருக்கின்றது.

இன்றைய நாட்டுச்சூழலில் “பசி வந்தால் பத்தும் பறக்கும்“ என்ற நிலையில் பொருளாதார ரீதியான அழுத்தங்களால் மக்கள் பெரிதும் அவஸ்தைக்கு உள்ளாகியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

நாட்டில் திரும்புமிடமெல்லாம் மக்கள் நீண்ட வரிசையில் அத்தியாவசிய பொருட்களைப்பெற கால்கடுக்க நின்றுகொண்டிருக் கின்றனர்.

எரிபொருள் விலையேற்றத்துடன் தட்டுப்பாடு நிலவுகின்ற அதேசமயம் சாதாரண மக்கள் உணவருந்துகின்ற உணவகங்கள் பலவும் நாடளாவிய ரீதியில் மூடப்பட்டுள்ளன. அத்துடன், அந்த உணவகங்களுக்கு உணவுப் பொருட்களை விநியோகிக்கின்ற வெதுப்பகங்கள்கூட சமையல் எரிவாயு தட்டுப்பாடு மற்றும் கோதுமை மா தட்டுப்பாடு என்பவை காரணமாக தமது செயல்பாடுகளை நிறுத்தியுள்ளன.

இதன்காரணமாக சாதாரண விலைகளில் உணவருந்துவோர் ஒருபுறம் பாதிப்புற்றிருக்க உணவகங்கள், வெதுப்பகங்களை நடத்துவோர், அவற்றில் பணியாற்றுவோர் ஆகியோர் மறுபுறத்தே பாதிப்புற்றுள்ளனர்.

இலங்கையின் பரிதாபகரமான நிலையை அறிந்து இந்தியா மேலதிகமாக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனுதவியை இலங்கையின் எரிபொருள் கொள்வனவுக்காக அறிவித்துள்ளது.

இந்நிலையில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேச முன்வந்துள்ளார். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பேச்சுகளுக்கு அழைத்திருப்பதை நோக்கும்போது உளப்பூர்வமாகவே வடக்கு - கிழக்கு தமிழர்களின் பிரச்னைகள் குறித்துப் பேசுவதற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளாரா? அல்லது தற்போதைய இக்கட்டான பொருளாதார சூழ்நிலைகளிலிருந்தும் நாட்டு மக்களின் கவனத்தை திசைதிருப்ப ஜனாதிபதி தமிழ் தரப்போடு பேச்சு நடத்த முன்வந்துள்ளாரா ? என்றே எண்ணத்தோன்றுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வடக்கு - கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டம் தோற்கடிக் கப்பட்டதை முன்நிறுத்தியே பதவிக்கு வந்திருந்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சகோதரரான மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது வடக்கு - கிழக்கு மக்கள் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவது தொடர்பாக நிறையவே எதிர்பார்த் திருந்தனர்.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷ மாத்திரமல்ல. ஜனாதிபதியாகவிருந்த சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க உட்பட அனைத்து ஜனாதிபதிகளின் காலப்பகுதிகளிலும் வடக்கு - கிழக்கு மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளமையையே அவதானிக்க முடிகின்றது.

வடக்கு - கிழக்கு மக்கள் நல்லாட்சி என்ற வார்த்தை ஜாலத்தால் ஏமாற்றமடைந்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி ஆக்கியமையே அவர்கள் எதிர்கொண்ட பெரும் ஏமாற்றமாக அமைந்திருந்தது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கு வடக்கு - கிழக்கு மக்களே மூலகாரணமாக அமைந்திருந்தனர். இதனை மைத்திரிபால சிறிசேனவே பல தடவைகள் குறிப்பிட்டிருந்தார்.

இருந்தபோதிலும் மைத்திரிபால சிறிசேனவின் தெரிவின் மூலம் வடக்கு - கிழக்கு மக்களே “இலவு காத்த கிளி“களாகினர்.

மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தெரிவு செய்வதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரிவான பிரசாரத்தை வடக்கு - கிழக்கில் மேற்கொண்டிருந்தனர். ஆனால், முழு நாட்டுக்குமே துரோகமிழைத்து பாராளுமன்ற ஆட்சிக்கு மைத்திரிபால சிறிசேன சவால்விட்டு பிரதமராக அன்றிருந்த ரணில் விக்கிரமசிங்கவை பதவியிலிருந்து அகற்ற முன்வந்தபோது தமிழ்த் தேசிய கூட்டமைப்பே செயலில் இறங்கி பிரதமராக இருந்த ரணில் விக்கிரம சிங்கவையும் காப்பாற்றி மைத்திரிபால சிறிசேனவின் கபடத்தனமான ஜனநாயக விரோத நடவடிக்கையையும் முறியடித்திருந்தது.

தற்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வந்துள்ளார் என்ற அறிவிப்பு குறித்து தமிழ் தேசிய கூட்டமைப்பு மிக விழிப்புடனிருக்க வேண்டியது அவசியமானதாகின்றது.

ஏனெனில், நல்லிணக்கம் , பொறுப்புக் கூறல் என்பவை தொடர்பாக ஏற்கனவே பல தடவைகள் தமிழ்த் தரப்பு ஏமாந்துள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள இக்கட்டான பொருளாதார நிலையினால் குழம்பிப்போயுள்ள நாட்டு மக்களை திசை திருப்பும் விதத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் அரசியல் தரப்பினருடனான பேச்சுக்களை கையாள அரச தரப்பு முன்வந்துள்ளதோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. எனவே, ஜனாதிபதியுடனான உத்தேச பேச்சுக்கள் தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்ட மைப்பு மிக அவதானமாக எவ்விதமான அரசியல் தந்திரங்களிலும் சிக்காது நடந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
மன உளைச்சல் நீங்கி நிம்மதி கிடைக்கும். கல கலப்பு கூடும். நீங்கள் வாழ்வில் முன்னேறுவீர்கள். புதியவர்களிடம் கவனம் தேவை. பிறரால் வந்த பிரச்னை தீரும். மனதில் அமைதி பிறக்கும்.

**இடபம்**
நினைத்த வேகத்தில் முக்கிய பணிகளை முடிப் பீர்கள். நீண்ட நாள் தடை நீங்கும். பிள்ளைகள் மூலம் சந்தோஷம் கிடைக்கும். நண்பர்கள் மூலம் விரும்பிய செய்திகள் வந்து சேரும்.

**மிதுனம்**
சுபச் செலவுகள் அதிகரிக்கும். மன நிறைவான நாள். மனதிலுள்ள கற்பனை பயம் நீங்கும். எதிர்ப் புகளை வெல்வீர்கள். உங்கள் எண்ணங்களிலும், செயல்களிலும் நேர்மை அதிகரிக்கும்.

**கடகம்**
சமயோஜித புத்தியால் வாழ்வில் நல்ல திருப்பம் உண்டாகும். எதிர்பார்த்த நன்மைகள் சற்று கால தாமதமாகி கிடைக்கும். பொறுமைக்கு தகுந்த பரிசு கிடைக்கப் பெறுவீர்கள். விருந்தில் பங்கேற்பீர்கள்.

**சிம்மம்**
செலவுகள் குறையும். தயவான எண்ணங்கள் மென் மேலும் அதிகரிக்கும். உறவினர், நண்பர் களுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் வரும். நண்பர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு உண்டாகலாம்.

**கன்னி**
வாழ்வில் வெளிச்சம் தென்பட ஆரம்பிக்கும். புகழ் கூடும். கடின முயற்சியின் பலனாக நிறைய நன் மைகள் உண்டாகும். நிதானம் தேவை. குழந் தைகள் உங்களை பெருமை படுத்துவார்கள்.

**துலாம்**
முயற்சியின் பேரிலேயே அனைத்து செயல்களும் வெற்றி பெறும். வியாபார விஷயத்திற்காக அதிகம் உழைப்பீர்கள். தாமதமாகி கொண்டிருந்த பணம் கிடைக்க வாய்ப்பு இன்று அதிகம்.

**விருட்சிகம்**
யாருக்கும் சிபாரிசு செய்யாதீர்கள். முன்கோபத்தை தவிர்க்க வேண்டும். கடனாக, கைமாற்றாக பணம் வாங்கவோ, கொடுக்கவோ வேண்டாம். உழைத்த நற்பலன் கிடைப்பதால் சிரமம் மறையும் மகிழ்ச்சி.

**தனுசு**
இன்று அமைதியாக செயல்பட்டால் நற்பலன் கிடைக்கும். சுயதேவையை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களால் உதவி உண்டு. தொழில் தொடர்பான சந்திப்புகள் நற்பலனை அளிக்கும்.

**மகரம்**
திட்டங்களை ரகசியமாக வைத்து கொண்டு சாதனை புரிவீர்கள். பொருளாதார சிக்கல் மறையும். குடும் பத்தேவையை நிறைவேற்றுவீர்கள். நீண்டநாள் முயற்சி சாதகமான பலனைத்தரும்.

**கும்பம்**
குடும்பத்தில் விஷயங்களால் மன மகிழ்ச்சி ஏற் படும். வியாபாரம் தொடர்பாக நண்பர்களுடன் நெடுந்தூரம்பயணம்செல்ல நேரிடலாம். சுயதொழில், பணியிடத்தில் போட்டிகள் தானாக விலகும்.

**மீனம்**
தொழிலாளர்கள் மேலதிகாரியை அனுசரித்துச் செல்வதால் நன்மை கிடைக்கும். சகபணியாளர் களால் முன்னேற்றம் ஏற்படும். குடும்பத் திற்கு மகிழ்ச் சியான நாள். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள்.

# தனியார் தொலைக்காட்சிகளில் சட்ட சபை கூட்டத்தை நேரலை செய்ய தி.மு.க. தயாரா?

## கேள்வி எழுப்புகிறது மக்கள் நீதி மய்யம் கட்சி

*சென்னை, மார்ச் 12*

முதல்வர், அமைச்சர்கள், எம்எல்ஏ.,க்கள் பேச்சு கண்ணியத்தோடும் இருக்கும் என திமுகவிற்கு நம்பிக்கை இருக்குமானால், சட்டப்பேரவைக் கூட்டத்தொடரை தனியார் தொலைக்காட்சிகளில் முழு நேரடி ஒளிபரப்பு செய்ய திமுக தயாரா? என மக்கள் நீதி மய்யம் கேள்வி எழுப்பியுள்ளது

இது குறித்து அக்கட்சியின் ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “தங்கள் முதல்வர், அமைச்சர்கள், எம்எல்ஏ-க்களின் பேச்சானது கருத்தோடும், கண்ணியத்தோடும் இருக்கும் என்று தி.மு.கவிற்கு நம்பிக்கை இருக்குமானால் தனியார் தொலைக் காட்சிகளை சட்டமன்றத்தில் அனுமதித்து ஒளிபரப்பு செய்யச் சொல்லலாமே? எந்தச் செலவுமின்றி முழு நேரடி ஒளிபரப்பு சாத்தியமாகும். தி.மு.க. தயாரா?

பட்ஜெட் உரை மற்றும் கேள்வி நேரம் மட்டுமே நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்றும், பட்ஜெட் கூட்டத்தொடரின் அனைத்து நிகழ்வுகளையும் நேரடி ஒளிபரப்பு செய்வதில் தொழில்நுட்ப சிக்கல் இருக்கிறது என்ற அறிவிப்பு அலட்சியத்தின் வெளிப்பாடே. அரசிற்கு உதவும்பொருட்டு தொழில்நுட்ப சிக்கலைக் களைய மநீம தயார்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டவிரோத செயலுக்காக தமிழக மீனவர் கடல் எல்லையை தாண்டி செல்வதில்லை

## விடுவிக்க நடவடிக்கை எடுக்க கோரும் அன்புமணி

*சென்னை, மார்ச் 12*

தமிழக மீனவர்களின் நோக்கம் எல்லை தாண்டி மீன் பிடிப்பதோ, சட்டவிரோத செயல்களை செய்வதோ அல்ல.. வாழ்வாதாராம் ஈட்டுவதற்காக சென்ற அவர்கள் எல்லை தெரியாமல்தான் அடுத்த நாட்டு எல்லைக்குள் சென்று விடுகின்றனர். இதைக் கருத்தில் கொண்டு அவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாமக இளைஞரணித் தலைவர் அன்புமணி இராமதாஸ் தெரிவித்துள்ளார்.



இலங்கை கடற்படையினரைத் தொடர்ந்து, தற்போது இந்தோனேசியா மற்றும் செஷல்ஸ் நாட்டு கடற்படையினரும் எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி தமிழக மீனவர்களை சிறைப்பிடித்து வருகின்றனர். எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி கடந்த 7ஆம் திகதி குமரி மாவட்டத்தைச் சேர்ந்த 33 மீனவர்களை செஷல்ஸ் நாட்டு கடற்படையினர் சிறைப்பிடித்த நிலையில், நேற்று 25 மீனவர்களை சிறைப் பிடித்துள்ளனர். மொத்தமாக, குமரி மாவட்டத்தில் உள்ள 5 படகுகள் மற்றும் 58 மீனவர்களை செஷல்ஸ் நாட்டு கடற்படையினர் சிறைபிடித்து வைத்துள்ளனர். இதுகுறித்து அன்புமணி தன்னுடைய ருவிட்டர் பக்கத் தில், “குமரி மாவட்டத்திலிருந்து கொச்சி துறைமுகம் வழியாக மீன்பிடிக்கச் சென்ற 33 மீனவர்கள் கடந்த 7 ஆம் திகதி செஷல்ஸ் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அதேபோல், இந்தோனேசிய எல்லைக்குள் நுழைந்ததாக குமரி மாவட்ட மீனவர்கள் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

# பேரறிவாளனுக்கு விரைவில் திருமணம் அற்புதம்மாள்

*சென்னை, மார்ச் 12*



“தற்போது சுதந்திரமாக இருப்பதால் திருமணம் செய்து கொள்வதாக பேறறிவாளன் கூறியுள்ளார். இதனால், முதல் ஏற்பாடாக பேரறிவாளனுக்கு திருமணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என பேறறிவாளன் தாயார் அற்புதம்மாள் தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சுமார் 31 ஆண்டுகளுக்கும் மேலாக சிறை தண்டனை அனுபவித்து வந்த பேரறிவாளனுக்கு சில தினங்களுக்கு முன்னர் உச்சநீதிமன்றம் பிணை வழங்கியது.

அற்புதம்மாள் திருப்பத்தூரில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது பேசிய அவர், “உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவு மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. என் மகனின் உடல் நிலை சீராக உள்ளதற்கு முக்கிய காரணம் 9 மாத காலமாக பரோலை நீட்டித்தது தான் காரணம்.

தற்போது சுதந்திரமாக இருப்பதால் திருமணம் செய்து கொள்வதாக பேறறிவாளன் கூறியுள்ளார். இதனால், முதல் ஏற்பாடாக பேரறிவாளனுக்கு திருமணம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதுமட்டுமல்லாமல் எனது மகன் விவசாயத்தில் முழு ஈடுபாடு கொண்டவர். இப்போதைக்கு அதற்கான பொருளாதார வசதி இல்லை. வருங்காலத்தில் கண்டிப்பாக விவசாயத்தில் பேறறிவாளன் ஈடுபடுவார்.

30 வருடங்கள் போராட்டத்திற்கு பிறகு என் மகனுக்கு பிணை வழங்கப்பட்டது அளவில்லாத மகிழ்ச்சியாக உள்ளது. இதற்கு உறுதுணையாக இருந்த தமிழக அரசு மற்றும் முதல்வருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்” என்றார்.

# தயாளு அம்மாள் மருத்துவமனையில் அனுமதி

*சென்னை, மார்ச் 12*

முதல்வர் மு.க.ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாள் உடல்நலக் குறைவு காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மனைவியும், தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் தாயாருமான தயாளு அம்மாளுக்கு (89) நேற்றுமுன்தினம் உடல்நிலை பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்போலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து மருத்துவமனை மருத்துவர்கள் கூறும்போது, “வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட உடல்நலப் பாதிப்புகள் தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. அவருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, ஓரிரு நாட்களில் வீடு திரும்புவார்” என்றனர்.

## மன்னிப்போம் மறப்போம்



அன்பே கடவுள், அன்பின் நிலைத் திருப்பவன் கடவுளுக்குள் நிலைத் திருக்கிறான். பலன் எதிர்பாராது அன்பு செய்வது தான் உண்மையான அன்பு. எனவே தான் கடவுள் எல்லோரையும் பலன் எதிர்பாராது அன்பு செய்தார் என்பதை இந்த நற்செய்தி மூலம் அறியலாம்.

யேசு "பகைவர்களை அன்பு செய் யுங்கள். உங்களை துன்புறுத்துவோருக்காக செபியுங்கள்" (மத்: 5:44) என்பார். அதை அவர் செயற்படுத்திக்காட்டினார். தம்மை சிலுவை மரணத்திற்கு தீர்ப்பிட்டவர்களுக்காக "தந்தையே இவர்களை மன்னியும் ஏனெனில் தாங்கள் செய்வது இன்ன தென்று இவர்களுக்கும் தெரியவில்லை" (லூக் 23:34) என்று தந் தையிடம் மன்றாடினர். அந்த அன்பு தான் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கின்றார் இத்தவக் காலத்தில்.

எனவே எம் சகோதர சகோதரிகளிடம் எமக்குள்ள பகையை மன்னித்து அன்பு செய்வோம். மற்றவர்களின் குறைகளில் இன் னபம் காண்பதை விடுத்து எமது குற்றங்களுக்காக மனமாற்றம் அடையவும் எல்லோரையும் அன்பு செய்யவும் முயற்சிப்போம். இறையருள் எமக்கு எப்போதும் உண்டு என்று நம்புவோம்.

அருட்பணி ம.ஜோண் பொஸ்கோ செ.தா

# தற்போதைய பேரவல நிலைமைக்கு கடந்த நல்லாட்சி அரசே பொறுப்பு!

### எஸ்.பி. திஸாநாயக்க குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 12

**"இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பேரவல நிலைமைக்குக் கடந்த நல்லாட்சி அரசே முழுமையாகப் பொறுப்புக்கூற வேண் டும்."**

- இவ்வாறு அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நல்லாட்சியில் மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர் என வும், நாட்டின் தற்போதைய நிலைமைக்கு இந்த அரசின் நட வடிக்கைகளே பொறுப்பு என வும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலடி கொடுக் கும் வகையிலேயே எஸ்.பி. திஸாநாயக்க மேற்கண்டவாறு ஊட கங்களிடம் கூறினார்.அவர் மேலும் தெரிவிக்கை யில்,

நல்லாட்சியின் முறையற்ற தீர்மானங்களால்தான் நாட்டில் இந்த நிலைமை ஏற்பட்டுள் ளது. அன்று ஏற்பட்ட தாக்கங் களே இன்றளவிலும் எதிரொ லிக்கின்றது.

எனவே, தேசிய அரசு அல்ல, அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது எதிரணிகளின் பொறுப்பாகும்-என்றார். (அ)

## விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணங்கள் 27 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, மார்ச் 12

விமான பயணச் சீட்டுகளுக் கான கட்டணங்கள் அதிகரிக் கப்படவுள்ளதாக சிவில் விமான போக்குவரத்து அதிகா ரசபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய, அனைத்து வகையான விமான பயணச் சீட்டுகளுக்கான கட்டணங்கள் 27 வீதத்தினால் அதிகரிக்கப்பட வுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் இந்த கட்டண அதிகரிப்பு அமுலா கியுள்ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

## நேற்று முதல் எரிவாயு விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 12

நேற்று முதல் சந்தைக்கான சமையல் எரிவாயு விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட் டுள்ளதாக, லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

டொலர் நெருக்கடி கார ணமாக எரிவாயு இறக்குமதிக்கு நாணயக் கடிதங்களை வழங் குவதை கடந்த வாரம் வங்கிகள் தற்காலிகமாக நிறுத்தியதை அடுத்து எரிவாயு விநியோகத் தில் சிக்கல் நிலை தோன்றியி ருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ரஷ்ய தூதுவர்-ரணில் கொழும்பில் சந்திப்பு!

கொழும்பு, மார்ச் 12

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வுக்கும், இலங்கைக்கான ரஷ் யத் தூதுவருக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன வும் இந்த சந்திப்பில் பங்கேற் றிருந்தார்.

உக்ரைனுக்கும், ரஷ்யாவுக் கும் இடையில் போர் மூண் டுள்ள நிலையில், இலங்கையின் ஏற்றுமதியில் ஏற்படும் தாக்கம், ரஷ்யாவில் உள்ள இலங்கையர் களின் நிலைவரம் உட்பட மேலும் சில விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

அதேவேளை, ரஷ்யா-உக் ரைன் விவகாரம் தொடர்பில் தொலைக்காட்சியொன்றுக்கு அண்மையில் வழங்கிய நேர் காணலில், உக்ரைன் ஜனாதிபதி யின் அணுகுமுறைகளை ரணில் விக்கிரமசிங்க சாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் தென் கொரியா தூதுவர்களுடனும் ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத் தியுள்ளார். சீனத் தூதரக அதிகா ரிகளையும் சந்தித்துள்ளார்.

ஐரோப்பியாவில் ஏற்பட் டுள்ள நிலைமையால், ஆசியா எழுச்சி பெறுவதற்குள்ள வாய்ப் புகள் பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. (அ)

## நிலக்கரிக்கு தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, மார்ச் 12

நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு அவசியமான நிலக்கரி உரியவாறு நாட்டுக் குக் கொண்டுவரப்பட்டுள்ள தென எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையம் ஊடாக தேசிய மின்சார கட்டமைப்புக்கு 900 மெகாவாட் மின்சாரம் கிடைக்கின்றது.

இந்தநிலையில், எதிர்வரும் ஏப்ரல் மாதம் நிறைவடையும் வரையில் அனல்மின் நிலையத் துக்கு அவசியமான நிலக்கரி, மேலும் 5 கப்பல்களின் மூலம் கொண்டுவரப்பட உள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட் டார். (அ)

## புத்தளம் படகு இராமநாதபுரத்தில்!

கொழும்பு, மார்ச் 12

புத்தளத்தைச் சேர்ந்த படகு ஒன்று தமிழ்நாடு இராமநாத புரம், தேவிபட்டினத்தில் கரை யொதுங்கியது.

ஆட்கள் எவரும் இல்லாத நிலையில் அந்தப் படகு கரை யொதுங்கியுள்ளது.

கரையொதுங்கிய படகு தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின் றன. (அ)

## தபால் பொதியில் ஹெரோயின் சந்தேக நபர் கண்டியில் கைது

கொழும்பு, மார்ச் 12

மிகவும் நுணுக்கமான முறை யில் தபால் பொதியில் ஹெரோ யின் போதைப்பொருளை கடத்திய சந்தேக நபர் ஒருவரை கண்டி பொலிஸார் கைது செய் துள்ளனர்.

கொழும்பில் இருந்து கண் டியில் உள்ள ஒருவருக்கு அதனை அனுப்புவதாகவும், அதில் தவறாக முகவரியிடப் பட்டு அனுப்பப்படுவதாகவும் பின்னர் அதிலுள்ள தொலை பேசி அழைப்புக்கு தொடர்பு கொண்டு உரிய நபர் வந்து பெற்றுக் கொள்வதாகவும் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசார ணைகளை கண்டி பொலிஸார் முன்னெடுத்து வரு கின்றனர். (அ)

## இலங்கையின் மிகவும் வயதான பெண் 116 வயதில் காலமானார்

கொழும்பு, மார்ச் 12



இலங்கையின் மிகவும் வயது முதிர்ந்த பெண்ணாக கருதப்படும் கன்கானமி கமகே டிங்கிஹாமி, நேற்று முன்தினம் காலை தனது 116 வயதில் காலமானார்.

3 பிள்ளைகளின் தாயான இவர், 1906 ஆம் ஆண்டு ஜன வரி 11 ஆம் திகதி வெலிபிட் டிய பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட அக்குரஸ்ஸை, அத்து ரலிய பிரதேசத்தில் பிறந்து வெலி கம, கனங்கேவத் தையை வசிப் பிடமாகக் கொண்டிருந்தார்.

இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகளின் தாயான இவரது கணவர் 40 வருடங்களுக்கு முன்னர் மரணமடைந்துள்ளார்.

டிங்கிஹாமி சைவ உணவு உண்பவர் எனவும், 1982ஆம் ஆண்டு மட்டுமே அவர் மருத் துவமனையில் அனுமதிக்கப் பட்டார் என்றும் அவரது குடும்ப உறுப்பினர்கள் கூறு கின்றனர்.

அவரது இறுதிச் சடங்குகள் நேற்று வெள்ளிக்கிழமை அவ ரது குடும்ப மயானத்தில் இடம் பெற்றன. (அ)

# பதவிகளை துறந்துவிட்டு மக்களோடு வீதிகளில் இறங்கிப் போராடத் தயார்!

### தயாசிறி ஜயசேகர அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

தேவையான நேரத்தில் பதவிகளைத் துறந்துவிட்டு மக்களோடு மக்களாக வீதியில் இறங்கிப் போராடத் தயார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலா ளரும் இராஜாங்க அமைச்ச ருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

அரசில் நாம் அங்கம் வகித் தாலும் பங்காளிக் கட்சிகளு டனான எமது அரசியல் நடவ டிக்கை தொடரும். நாம் எவ ரையும் கைவிடவில்லை.

நாட்டை மீட்டெடுக்க எந்தவொரு தியாகத்தையும் செய்வதற்கு நாம் தயார். தேவையான நேரத்தில் பதவி களைத் துறந்துவிட்டு போராட வும் தயார்.



எவரினதும் வாலாக இருக்க நாம் விரும்பவில்லை. எதிர்கா லத்தில் பலமான கூட்டணி அமைக்கப்படும்-என்றார். (அ)

## சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேர் கைது

கொழும்பு, மார்ச் 12

பலாங்கொடை நொன்பேரி யல் இயற்கை வனத்தில் சட்ட விரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேரை நொன்பேரியல் வனப்பாது காப்பு காரியாலய அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இவ்வனத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் வழமையான பாது காப்பு ரோந்து நடவடிக்கை ளில் ஈடுபட்டிருந்தவேளை சந் தேக நபர்கள் தப்பி ஓடும் போது மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இரத்தினக்கல் அகழ்வுக்காக பயன்படுத்தப்பட்ட உபகரணங் களுடன் சந்தேக நபர்கள் பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். (அ)

# எதிரணியின் தலைமையகத்தை தாக்கி வரலாற்றுத் தவறை புரிந்துள்ளது அரசு!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 12

"நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தின் மீது தாக்குதல் நடத்தி அரசு வரலாற்றுத் தவறைச் செய்துவிட்டது. நாட்டில் ஆட்சி மாற்றம் இடம்பெற்றதன் பின்னர், இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனையை நிச்சயமாக வழங்குவோம்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

நாட்டில் நிலவும் எரிசக்திப் பிரச்சினை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியினரால் கொண்டுவரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில், அக்கட்சியின் தலைமையகத்தில் மேற்கொள்ளப்பட்ட முட்டைத் தாக்குதல் தொடர்பிலும் பலர் உரையாற்றியிருந்தனர்.

இதில் மரிக்கார் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் இல்லத்தின் முன்பாக ஹிருணிகா போராட்டத்தில் ஈடுபட்டதற்காக அவரது வீட்டுக்கு முன்பாக குண்டர்கள் சென்று சத்தமிட்டனர்.

இதன் பின்னர் குண்டர்களோடு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்குச் சென்றிருந்த ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மதுர விதானகே தலைமையிலான குழுவினர், கட்சியின் அலுவலகத்தின் மீது அழுகிய முட்டைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தினர்.

ஹிருணிகா முட்டை வேண்டும் என ஜனாதிபதியிடம் கேட்கவில்லை. நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்குத் தீர்வையே ஹிருணிகா கோரியிருந்தார்.

ஜனாதிபதியின் இல்லத்துக்கு முன்பாக சத்தம் போட்டதாலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்துக்கு முன்பாக சென்று சத்தமிட்டதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூறியுள்ளார். இதுதான் தற்போதைய அரசு- என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்னை எழுப்பி உரையாற்றிய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட ஆளுங்கட்சி எம்.பி. மதுர விதானகே,

"ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்கு முன்பாக இடம்பெற்ற சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். பல கேள்விகளை உள்ளடக்கிய ஆவணம் ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தியினரிடம் வழங்குவதற்காகவே அங்கு சென்றிருந்தேன்.

எவ்வாறாயினும் அங்கிருந்த மக்கள் சிலரே அழுகிய முட்டைகளைக் கொண்டு தாக்குதல் நடத்தியிருக்கக்கூடும்

இந்தத் தாக்குதலுக்கும் எனக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. மேற்படி தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பொலிஸாருக்கு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்" - என்றார்.

இதேவேளை, இதன்போது குறுக்கீடு செய்து உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க,

"மதுர விதானகே ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்துக்குச் சென்றதை நாம் பார்த்தோம். எங்களுக்கு உள்ள பிரச்னை என்னவென்றால், தாக்குதல் நடத்தச் சென்றவரே பொலிஸார் விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கியதாகக் கூறுவதுதான்" - என்றார். (அ)

# தேசிய அரசு அமையாது!

## மொட்டு கட்சி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 12

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிப்பதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும். அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லையென போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.**

சமகால அரசியல் நிலவரம் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

'முழு நாடும் சரியான பாதைக்கு' என்ற மாநாட்டில் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில ஆகியோருடன் ஒன்றிணைந்திருந்த சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன விமல், கம்மன்பிலவின் அமைச்சுப் பதவிகள் பறிபோனதன் பின்னர் தனித்துச் செல்வதை காண முடிகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறுவதற்கு விமல், கம்மன்பில ஆகியோர் முன்னின்று செயற்பட்டனர். நெருக்கடியான சூழ்நிலைமையின் மத்தியில் தான் ஜனாதிபதி அவர்களைப் பதவி நீக்கினார். பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்பதை விளங்கிக்கொள்ளவேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் உட்பட அக்கட்சியின் உறுப்பினர்களின் செயற்பாடு மீது முழுமையாக நம்



பிக்கை கொள்ளமுடியாது.

எந்நிலையிலும் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்துவார்கள் என்பதை ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்டு வருகிறேன்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைந்து தேசிய அரசாங்கத்தை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளதாக சமூக வலைத்தளங்களிலும், பத்திரிகைகளிலும் வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும்.ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒன்றிணைய வேண்டிய தேவை பொது ஜன பெரமுனவுக்கு கிடையாது. அரசாங்கத்தின் பெரும் பான்மை பலத்துக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது-என்றார். (அ)

# தரமற்ற உர இறக்குமதியை உடனே தடை செய்யுங்கள்!

கொழும்பு, மார்ச் 12

தரமற்ற இயற்கை உரங்களை இறக்குமதி செய்வதைத் தவிர்க்குமாறு ஜனநாயகத்திற்கான சிவில் சமூக அமைப்புகளின் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

விவசாயத் திணைக்களம் ஆரம்பத்திலிருந்தே விவசாய சமூகத்தின் அவல நிலையை உரிய அமைச்சர்களிடம் தெரிவித்திருந்தால் இவ்வாறான நிலை ஏற்பட்டிருக்காது என அது கூறியுள்ளது.

எஸ்.எல்.எஸ் தரத்திற்கு முரணான கரிம உரங்களை மீண்டும் இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூட்டமைப்பின் அழைப்பாளர் கலாநிதி ஹேரத் எம். ஆரியரத்ன தெரிவித்தார்.

பக்டீரியா கலந்த உரம் இறக்குமதி செய்யப்படுவதைக் பரிசோதித்து கண்டறியும் ஒரு குறிப்பிட்ட சரத்து திருத்தப்பட்டு வருகிறது. இது ஒருவரின் ஆரோக்கியத்துக்கும் அறுவடைக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். சீன உரம் இறக்குமதி செய்வதும் பாரிய ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்று அவர் கூறினார்.

எனவே, இவ்வாறான முயற்சிகள் முற்றாக நிறுத்தப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

விவசாயத் தொழில் அழிந்துள்ள அதேவேளை உணவு உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் விவசாயிகள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கலாநிதி ஆரியரத்ன மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மாலை விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அஜந்த டி சில்வாவை சந்தித்தனர்.

தரமற்ற பொருட்கள் இறக்குமதி செய்யப்படமாட்டாது என பணிப்பாளர் நாயகம் உறுதியளித்துள்ளார். (அ)

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் திங்களன்று தொழிற்சங்க போராட்டம்!

கொழும்பு, மார்ச் 12

தேசிய ரீதியில் செயற்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை சங்கத்தினால் நாடுதழுவிய ரீதியாக எதிர்வரும் 14 ஆம் திகதி முன்னெடுக்கப்படவிருக்கும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கத் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: நீண்ட கால அடிப்படையில் காணப்படும் சம்பள முரண்பாடுகள், மேலதிக கொடுப்பனவுகள், பதவியுயர்வு மற்றும் ஏனைய தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு வடமாகாணத்தை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கி குறித்த போராட்டத்தை வெற்றி பெறச் செய்வோம்.

எனவே குறித்த தினத்தில் வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது திணைக்களங்களுக்கு சுகயீன விடுமுறையை உரிய முறையில் அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி இதை வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்-என்றுள்ளது. (அ)

# அமைச்சர் பஸிலின் ஆட்டத்துக்கு முடிவு கட்டினால்தான் நாமலுக்கு எதிர்காலம்!

## சுட்டிக்காட்டுகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, மார்ச் 12

"பஸில் ராஜபக்ஷ என்பவர் அரசியல் சூழ்ச்சிக்காரர். மஹிந்தவுக்கு எதிராகவே தேர்தலில் போட்டியிட்டவர். எனவே, அவரின் அரசியல் ஆட்டத்துக்கு முடிவு கட்டாவிட்டால் நாமல் ராஜபக்ஷவுக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது."

- என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இரட்டைக் குடியுரிமைக் கொண்ட பஸில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதற்கு



நாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம். புதிய அரசமைப்பு ஊடாக இதற்கான ஏற்பாடு செய்யப்படும் என ஜனாதிபதி உறுதியளித்தார். அதனை நம்பினோம். ஆனால் அந்த உறுதிமொழி மீறப்பட்டது.

பஸில் ராஜபக்ஷ என்பவர் சூழ்ச்சிக்காரர். நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படுபவர். காமினி திஸாநாயக்க காலத்தில் மஹிந்தவுக்கு எதிராக தங்காலையில் போட்டியிட்டவர் அவர். 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வி அடைந்த பின்னர், எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோரியவர். அதற்கு மஹிந்த ராஜபக்ஷ உடன்படவில்லை.

பஸில் சொல்வதை கேட்டப்படி, நாமல் ராஜபக்ஷ மௌனம் காத்தால், அவருக்கான அரசியல் எதிர்காலம் இல்லாமல் போய்விடும்-என்றார். (அ)

# எமது ஆட்சி பலமாகவே உள்ளது பொருளாதாரத்தில்தான் சவால்!

## கூறுகின்றார் நாமல் ராஜபக்ஷ



**கொழும்பு, மார்ச் 12**

**“எமது ஆட்சி பலமாகவே இருக்கின்றது. பொருளாதார ரீதியில்தான் நாம் சவால்களை எதிர்நோக்கியுள்ளோம். இந்நிலையில், ஆட்சி கவிழ ஒருபோதும் இடமளியோம். பொருளாதாரப் பிரச்னைக்கு முடிவு காண்பதே எமது திட்டம்.”**

- இவ்வாறு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய அரசமைப்பது தொடர்பில் அரசு எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்றும், எதிரணி தரப்பில் இருந்தே இவ்வாறான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் சர்வகட்சி மாநாடென்பது பொருத்தமான நடவடிக்கை. அதில் பங்கேற்று, கட்சி அரசியலுக்கு அப்பால், நாடு தொடர்பான யோசனைகளை கட்சிகள் முன்வைக்க வேண்டும்-என்றார். (அ)

# விமலின் மனைவிக்கு எதிரான வழக்கின் தீர்ப்பு ஒத்திவைப்பு

கொழும்பு, மார்ச் 12

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவின் மனைவி சசி வீரவன்ஸவுக்கு எதிரான வழக்கு தொடர்பான தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, குறித்த வழக்கின் தீர்ப்பு மே மாதம் 6ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளதாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு பொய்யான தகவல்களை சமர்ப்பித்து இராஜதந்திர கடவுச்சீட்டை போலியாக தயாரித்தமை தொடர்பான குற்றச்சாட்டின் பேரில் அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளின் பரிசீலனை அண்மையில் நிறைவடைந்தது.

இதனையடுத்து குறித்த வழக்கின் தீர்ப்பு நேற்று அறிவிக்கப்படும் என கொழும்பு பிரதான நீதவான் புத்திக ரகல பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி அறிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை பெற்றோலியத்துறைக்கு நீண்ட காலம் உதவவுள்ள இந்தியா

கொழும்பு, மார்ச் 12

இலங்கையின் பெற்றோலிய நெருக்கடி நிலையை வெற்றிகொள்ள தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொரகொட நேற்று முன் தினம் இந்திய பெற்றோலியத்துறை அமைச்சர் ஹர்டீப் சிங் பூரியை சந்தித்தபோது இதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது

இதன்போது, இந்தியா நடப்பு எரிபொருள் பிரச்னையை தீர்ப்பதற்கு வழங்கிய 500 மில்லியன் டொலர்கள் உதவிக்கு மொரகொட நன்றி தெரிவித்தார்.

அத்துடன், தற்போது நாடு எதிர்கொள்ளும் எரிசக்தி நெருக்கடி தொடர்பிலும் மொரகொட விளக்கமளித்தார்.

இதனையடுத்து இரண்டு தரப்பினரும் பிரச்னையை வெற்றி கொள்ள செயற்படுத்தவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தனர்.

அதேநேரம் பெற்றோலியம், எரிபொருள், எரிவாயு மற்றும் மூலோபாய திட்டங்களின் நீண்டகால திட்டங்கள் தொடர்பாகவும் இருவரும் கலந்துரையாடினர்.

இந்திய அமைச்சர் ஹர்டீப் சிங் ஏற்கனவே இலங்கையின் இந்திய தூதுவராக செயற்பட்டவராவார். (அ)

# அரசுக்கு எதிராக மாபெரும் கூட்டம் நடத்த தயாராகும் விமல் வீரவன்ஸ!

கொழும்பு, மார்ச் 12

கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் தோல்விக்கு பின்னர் நடத்திய மகிந்த காற்று என்ற தலைப்பிலான மாபெரும் பொதுக் கூட்டத்தை போன்ற கூட்டத்தை நுகேகொடை நகரில் நடந்த முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையில்10 கட்சிகளின் தலைவர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த பொதுக் கூட்டத்தை நடத்துவதற்கான திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்றபோதிலும் எதிர்வரும் 29 ஆம் திகதி இந்த பொதுக் கூட்டம் நடத்தப்படலாம் என 10 கட்சிகளுக்கு நெருக்கமான தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. இதனை தவிர அரசாங்கத் தில் அங்கம் வகிக்கும் இந்த கட்சிகள் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக இயங்க முடிவு செய்துள்ளன.

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை மீறி, அரசாங்கத்திற்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் மற்றும் விமர்சனங்களை முன்வைத்தனர் என்ற காரணத்தினால், விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சு பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கைக்கு 500 மில்லியன் டொலர் கடன் அனுமதியளித்தது இந்திய மத்திய வங்கி

கொழும்பு, மார்ச் 12

எரிபொருள் கொள்வனவுக்காக இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க இந்திய மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களிடமிருந்து மொத்தக் கடனில் குறைந்தது 75 வீத பொருட்கள்மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யவேண்டும் எனவும் மீதமுள்ள 25 வீதம் இந்தியா தவிர்ந்த வேறு நாடுகளிடமி ருந்து கொள்வனவுகளை மேற்கொள்ளப் பயன்படுத்தலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# ராஜபக்ஷக்கள் யுகத்துக்கு உடன் முடிவுகட்டவேண்டும்

## சஜித் அணி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 12

“அரசின் தவறான கொள்கைகளே நாட்டின் தற்போதைய நிலைமைக்குக் காரணம்.

ராஜபக்சக்களின் யுகம் உடனடியாக நிறைவுக்கு வரவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மின்சார சபை ஆரம்பத்தில் நட்டமடையும் நிறுவனமாக இருந்ததில்லை. அதுபோல் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் நட்டமடையும் நிறுவனமாக இருக்கவில்லை.

எனினும், தற்போது மின்சார சபையை வங்குரோத்து நிலைக்கு அரசு தள்ளியுள்ளது.

விவசாய அறுவடைக்குப் பயன்படுத்தப்படவேண்டிய நீர் மின் உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களில் தற்போது நடந்து செல்ல முடியும். அரசின் தவறான தீர்மானங்களே நாட்டின் தற்போதைய நிலைக்குக் காரணம்.

எனவே, ராஜபக்சக்களின் யுகம் உடனடியாக நிறைவுக்கு வர வேண்டும்-என்றார். (அ)

# இலங்கைக்கு 2 பில்லியன் டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவி

கொழும்பு, மார்ச் 12

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த ஆண்டு இலங்கையின் செயற்பாட்டுத் திட்டங்களுக்காக 2 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் உதவியை ஒதுக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் சத்சுகு அசகவா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்தபோதே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கி கடந்த வருடம் இலங்கைக்கு 750 மில்லியன் அமெரிக்க டொலர்களை சலுகைக் கடனாக வழங்கியது.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர்



ஜனாதிபதி முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

கொரோனாவினால் பின்னடைவைச் சந்தித்த நாட்டின் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் மனித மூலதனத்தின் வளர்ச்சிக்கும் உதவுவதாக அவர் கூறியுள்ளார்.

இதன்போது, பசுமை விவசாயம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி மற்றும் கைத்தொழில் வலயங்களில் வெளிநாட்டு நேரடி முதலீடு ஆகியவற்றிற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார். (அ)

# சர்வக்கட்சி மாநாட்டையும் புறக்கணிக்கும் விமல் அணி

கொழும்பு, மார்ச் 12

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையில் நடைபெறவுள்ள சர்வக்கட்சி மாநாட்டை புறக்கணிப்பதற்கு விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது.

அத்துடன், உதய கம்மன்பில தலைமையிலான பிவிதுரு ஹெல உறுமயவும் இந்த மாநாட்டில் பங்கேற்காது என தெரியவருகின்றது.

எனினும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பங்கேற்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்தரக் கட்சியின் கோரிக்கைக்கு அமைய இம்மாநாடு நடைபெறுவதால் தான் சுதந்திரக் கட்சி பங்கேற்கின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**35 ஆண்டுகளாக கைகளுக்கு எட்டிய தூரத்தில் இருந்த உண்மைகள் இப்போது தானா இவர்கள் கண்ணுக்கும் அறிவுக்கும் பட்டிருக்கிறது? இவற்றை இவர்கள் இப்போது கூறுவதைப் பார்க்கையில் கோமாளிகள் வேடிக்கை காட்டுகிறார்கள் என்று கருதுவதா?**

**அ.வரதராஜபெருமாள்**



# சந்தர்ப்பத்தை சாதனையாக்கும் சூத்திரத்தை தேடாது தேர்தல் சூதாட்டத்தில் உருளுகிறது தமிழ்த் தேசியம்

கடந்த 9 ந்திகதி ஈழநாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரானர் ஒருவரின் அறிக்கையைப் பார்த்தேன். அது என்னை பின்வருமாறு எழுதத் தூண்டியது.

அரசியல் யாப்பின் 13ஆவது திருத்தம் முறையாகவும் முழுமையாகவும் நிறைவேற்றப்படுகின்ற நிலைமையை உருவாக்க வேண்டும். அதற்கு தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும் என நாம் கோரிய போதெல்லாம் - அதற்காக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்ளிடங்கலாக தமிழர்கள் மத்தியில் உள்ள அனைத்துக் கட்சிகளையும் இணைத்த ஒன்றுபட்ட தமிழர் அரசியல் அரங்கம் ஒன்றை உருவாக்க முயற்சித்த வேளையில்,

“தேசியம்”, “தாயகம்”, “சுய நிர்ணய உரிமை” என்பவற்றை ஏற்காதவர்களெல்லாம் துரோகிகள், ஒட்டுக் குழுக்கள் என கடந்த 35 ஆண்டுகளாக பட்டமளித்து துள்ளிக் குதிப்பதையே தமது அரசியலாகக் கொண்டிருந்ததோடு,

13வது திருத்தத்தால் தமிழ் மக்களுக்கு எந்தவித பயனுமில்லை. அது தமிழர்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வுக்கு உரிய வகையில் அதில் எந்தவித அதிகாரமும் இல்லை” எனவும்,

“13வது திருத்தத்தின் மூலம் அமைந்த மாகாண சபையை ஏற்க மாட்டோம், அனுமதிக்க மாட்டோம், தும்புக் கட்டையாலும் தொட மாட்டோம்” எனவும்,

“13வது திருத்தமும் அதன் மூலமான மாகாண சபையும் தமிழர்களின் ஒப்புதல் இல்லாமல் ஆக்கிரமிப்பு இந்தியாவால் தமிழர்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்று” எனவும், மேடை மேடையாக முழக்கங்கள் இட்டும், பத்திரிகைகளில் தலையங்களாக வரும் வகைகளில் அறிக்கைகள் விட்டும் தமிழ் மக்களை “எவடம் எவடம் புளியடி புளியடி என தமது தேர்தல் அரசியல் தளத்தில் தமிழ் மக்களை அழைத்துச் சென்றவர்கள் இப்போது:-

13வது திருத்தத்தை இல்லாமற் செய்வதற்கோ அல்லது அதனை கரைத்து விடுவதற்கோ இடமளித்து விடக் கூடாது என்கிறார்கள்:

13வது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை முழுமையாக நிறைவேற்ற வைப்பதற்கும், மாகாண சபையை தற்போதுள்ள அரசாங்கம் இல்லாமற் செய்து விடாமல் பாதுகாப்பதற்கும் இந்தியாவின் துணை மிகவும் அவசியமானது என்கிறார்கள்:

அதற்கு இந்தியாவுடன் நட்பை - நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் - எவ்வகையிலும் தொடர்ந்து பேண வேண்டும் என்கிறார்கள்:

இந்தியாவை விட்டால் வேறு வழியில்லை என்கிறார்கள்:

இந்தியாவை மீறி வேறு எந்த நாடும் தமிழர்களுக்கு உதவுவதற்கு முன் வர மாட்டாது என்கிறார்கள்:

13 ஆவதில் இருக்கின்ற காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபை செயற்படுத்தியிருந்தால் ஜனநாயக வழிகளில் போராட்டங்களை நடத்தி அதற்கும் மேலாக அதிகாரங்களை கோரி பெற்றிருக்க முடியுமாம்,

மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் அதற்கு உள்ள குறைந்த பட்ச அதிகாரங்களைப் பாவித்து அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை மட்டுப்படுத்தலாம், மேலும் அடிப்படையான பொருளாதாரத் துறைகளில் ஓரளவு அபிவிருத்திகளை மேற்கொள்ளலாம் என்று என்று தமது அறிக்கைகள் மூலம் 13வது திருத்தத்தினதும் மாகாண சபை முறையினதும் பயன்பாடுகளையும் அவசியத்தையும் அடுத்தடுத்து அடுக்கிறார்கள்.

இவற்றை உணர்வதற்கு இவர்களுக்கு 35 வருடங்கள் தேவைப்பட்டிருக்கின்றதா? இவர்கள் 35 ஆண்டுகளை வீணடித்து கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் தெரிந்தே தவற விட்டவர்கள்.

5 ஆண்டுகள் மிகப் பெரும்பான்மையாகக் கொண்டவர்களாக மாகாண சபையின் ஆட்சியை வைத்திருந்தவர்கள்: அது மட்டுமல்லாது 5 ஆண்டுகள் நல்லாட்சி என்ற பெயரில் இலங்கை அரசாங்கத்தையே தமது செல்வாக்கின் கீழ் வைத்திருந்தவர்கள்: அந்தவேளை, தமிழர்களுக்கான அரசியற் தீர்வைப் பெறுவதற்கு இந்தியா தேவையில்லை என்றவாறாக வீறாப்பு காட்டி செயற்பட்டவர்கள்: அப்போதெல்லாம் தமிழர்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாத பெரும் சாதனைகளை நிகழ்த்துபவர்கள் போல கூச்ச நாச்சமின்றி புலிகேசி வடிவேலு மாதிரி வேடம் கட்டி நாடகங்கள் நடத்தி விட்டு இப்போது ஒன்றும் தெரியாத பாப்பாக்களை ஊரார் ஏமாற்றி விட்டார்கள் என்பதாக பாவனை காட்டுகிறார்கள்.

35 ஆண்டுகளாக கைகளுக்கு எட்டிய தூரத்தில் இருந்த உண்மைகள் இப்போதுதானா இவர்கள் கண்ணுக்கும் அறிவுக்கும் பட்டிருக்கிறது? இவற்றை இவர்கள் இப்போது கூறுவதைப் பார்க்கையில் கோமாளிகள் வேடிக்கை காட்டுகிறார்கள் என்று கருதுவதா? இவர்களது இப்போதைய பேச்சுக்களையும் அறிக்கைகளையும் பார்க்கையில் மீண்டும் தமது வாக்கு வேட்டைக்கு மக்கள் இன்றைய நிலையில் விழுங்கக் கூடிய இரைகளை தமது பிரச்சாரத் தூண்டில்களில் கோர்த்திருத்திருக்கிறார்கள் என்ற எண்ணமே தூக்கலாக நிற்கின்றது.

இவர்களின் வேடிக்கையான நாடகங்களைப் பார்க்கையில் இன உணர்ச்சி உசுப்பேத்தலால் தமது மூளை கரள் கட்டி கல்லாகிப் போதலும் தெரியாத அப்பாவித் தமிழ்ச் சனத்தை நினைக்கையில் தான் “கடவுளாலும் இவர்களைக் காப்பாற்ற முடியாது” என்று வேதனைப் பட வேண்டியுள்ளது. தமிழர்கள் மத்தியிலுள்ள சமூகப் பெரியவர்களும், படித்த தமிழ்ப் பிரமுகர்களும், தமிழ்ப் பத்திரிகைகளும் இந்த வாக்கு வேட்டை அரசியல் நடத்தும் போலித் தேசியக்காரர்களைப் பற்றி என்னதான் அவ்வப்போது விமர்சித்தாலும், அவர்களையே தமிழ் மக்களின் தகுதி வாய்ந்த அரசியற் பிரதிநிதிகளாகவும் தவிர்க்க முடியாத தலைவர்களாகவும் தொடர்ந்து தூக்கி நிறுத்தி விடுகிறார்கள். மாற்று இல்லை என்பார்கள், ஆனால் மாற்றுக்கள் இங்கு வேரூன்றுவதற்குக் கூட விடுவதில்லையே, பின்னர் எப்படி அவை தலையெடுக்க முடியும்?

**இவை ஒரு புறமிருக்க,**

இப்போது இந்தியாவை நோக்கி பாமாலைகள் சூட்டும் தமிழ்த் தேசியங்கள் அண்மைக்காலம் வரை -

“இந்தியா ஓர் ஆக்கிரமிப்பு நாடு”:

“இந்தியா தனது நலன்களுக்காக தமிழர்களின் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஒரு நாடு”:

இந்திய இராணுவத்தை அனுப்பி தமிழ்ப் பெண்களைக் கற்பழித்து பல்லாயிரக்கணக்கில் தமிழர்களைப் படுகொலை செய்த ஒரு நாடு”:

புலிகள் தமிழீழ விடுதலையை சாதித்துக் கொண்டிருந்த வேளையில் இலங்கை அரசுக்கு உதவி செய்து தமிழர்களின் போராட்டத்தை அழித்த ஒரு நாடு”

என தமது உள்ளூர் மக்கள் மன்றங்களில் குற்றச் சாட்டுப் பத்திரங்களை வாசித்து வந்தவர்கள் - தமது பத்திரிகைகளில் கட்டுரை கட்டுரையாக எழுத வைத்து வெளியிட்டவர்கள் - தமக்கிடையிலான கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகளில் கொந்தளித்தவர்கள் - முகநூல்களில் தொடர்ந்து அடுக்கி வந்தவர்கள். - “இந்தியா ஒரு ஆக்கிரமிப்பு நாடு என்ற எண்ணத்தை தமிழ் மக்கள் மனங்களில் பதிவு செய்யும் எண்ணம் கொண்ட விளம்பரப் பலகைகள் யாழ்ப்பாணத்து வீதிகளின் பல சந்திகளில் இன்னமும் உள்ளன. அப்போது இந்திய ஆமிக்காரன் விருந்துகளுக்கு அழைத்த போது மட்டுமல்ல இந்த “ தமிழ்த் தேசிய” சிற்பிகள் இப்போது இந்திய தூதுவராலயம் அவரகளது கொண்டாங்களுக்கு அழைக்கிற போதும் முழங்காலில் ஓடிப்போய் முன் வரிசைகளில் அமர்ந்து கொள்கிறார்கள். இன்னமும் இவர்கள் இரட்டை முகமும் இரண்டு குணமும் கொண்ட வினோதங்கள்.

இப்போது:-

இந்தியா தொப்புள் குடி உறவு கொண்ட தாய்நாடாம் இந்தியாவுக்கு சிங்களவர்கள் நண்பர்களாக இருக்க மாட்டார்களாம் - தமிழர்கள் தான் உண்மையான நண்பர்களாக இருப்பார்களாம்:

இந்தியாவின் தேசிய நலன்கள் மீது தமிழர்கள் தான் எப்போதும் அக்கறையாக இருப்பார்களாம்.

எனவே, 1987 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளவற்றை முழுமையாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, இலங்கை அரசாங்கம் 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கும் இந்திய அரசாங்கம் அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமாம். அது இந்தியாவின் வரலாற்றுக் கடமையும் பொறுப்புமாம்.

விழுந்தவன் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது போல இவர்களின் வெங்காய வீறாப்புகள் வேற. தாங்கள் சொல்கிறபடி இந்தியா தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையாக செயற்பட்டால் இவர்கள் சீனாவிடமிருந்து இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களையெல்லாம் நிறுத்தி விடுவார்களாம். இவர்கள்தானாம் இந்தியாவின் தேசிய ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கேடயங்களாம். கேட்பவன் கேணையனாக இருந்தால் இவர்கள் எருமைக் கடாவின் கொம்பிலிருந்தும் நெய் வடித்து விடுவதாக கதையளந்து விடுவார்கள். பாவம் தமிழ் மக்கள்.

“இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் முழுமையாக, இந்தியா அன்று அளித்த வாக்குதிகளை அர்த்தமுள்ளவைகளாக ஆக்கும் வகையில், நிறைவேற்றுவதை இந்திய அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும். அது இந்தியாவின் வரலாற்றுக் கடமையும் பொறுப்பும் ஆகும்” என்று கூறுவதற்கும் இந்தியாவை நோக்கி கேட்பதற்கும், இந்தியா இலங்கை அரசுடன் சமாதான ஒப்பந்தம் செய்த போது, அது பற்றி எவ்வளவுதான் சந்தேகமும் விமர்சனங்களும் இருந்த போதிலும், அதனை ஏற்று, இந்தியாவின் நட்பு தேவை - இந்தியாவின் உதவி தேவை - இந்தியாவின் உறவு தேவை என்று தாங்கள் எதிர் நோக்கிய இழிவு படுத்தல்களை, அவமானங்களை, ஆபத்துக்களை, இழப்புகளை, துரோகிப்பட்டங்களை பொருட்படுத்தாது, செயற்பட்டவர்களுக்கே உரிமையுண்டு. இந்த போலித் தேசியங்களுக்கு எங்கே இருந்து அந்த உரிமை வருகின்றது. ஓ! தோட்டக்காட்டான் - வடக்கத்தையான் மேட்டுக்குடி யாழ்ப்பாணத்தானின் வீட்டு வேலைக்காரன் என்ற எண்ணத்தில் இருந்துதான் அது வருகிறதோ! தங்களது வீட்டு வேலைகளை தங்களுக்கு ஏற்றபடி தாங்கள் சொல்லுகிற நேரத்தில் இந்தியா செய்ய வேண்டும் என்ற நினைப்பில் இப்போதும் மிதக்கிறார்கள் போலிருக்கின்றது! ■

# துருக்கியில் நடந்த ரஷ்யா - உக்ரைன் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டம்?

**ரஷ்யா தன்னுடைய இராணுவப் பலத்தில் மிகக்குறைந்த அளவு சக்தியையே இது வரை உக்ரைன் மீது பாவித்திருக்கின்றது. ரஷ்யாவின் அதி நவீன விமானங்கள் ஒன்றும் இந்த யுத்தத்தில் இதுவரை பாவிக்கப்படவில்லை.**



குரு அரவிந்தன்

'ரஷ்யாவால் உக்ரைனின் சில நகரங்களைக் கைப்பற்ற முடியுமே தவிர முழுநாட்டையும் கைப்பற்ற முடியாது' என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்திருந்தார். பேச்சு வார்த்தை மூலம் இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு துருக்கி நாடு இரண்டு நாடுகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தது. ரஷ்யா - உக்ரையின் பிரச்சனைக்குத் தீர்வு காணும் வகையில் துருக்கி நாட்டில் நடந்த பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் வெளிவிவகார அமைச்சரான டெம்ரோ குலீபாவும், ரஸ்ய வெளிவிவகார அமைச்சர் சேர்ஜி லவ்ரோவும் துருக்கிக்கு வருகை தந்திருந்தனர். ஏற்கனவே பெலாரஸில் இரண்டு தடவைகள் இரண்டு தரப்பினருக்கும் பேச்சுவார்த்தைகள் நடந்தாலும், எந்த முடிவையும் எட்டவில்லை. அதே போலத்தான் இம்முறையும் எந்த முடிவுக்கும் இருதரப்பினரும் வரவில்லை. "பட்டால்தான் தெரியும்" என்பதுபோல, இரண்டு தரப்பினரும் பட்டுத் தெளிவதற்காகக் காத்திருப்பது போலத் தெரிகின்றது.

உக்ரைன் - ரஷ்ய யுத்தம் 15 வது நாளைக் கடந்த நிலையில் ஆங்காங்கே ரஷ்ய படைகள் தாக்குதல்களை நடத்திக் கொண்டு இருக்கின்றன. மரியுபோலில் உள்ள சிறுவர் வைத்திய சாலை ஒன்றும் தாக்கப்பட்டது. உக்ரைன் மக்களை உளரீதியாகக் களைப்படைய வைப்பதே ரஷ்யாவின் முதல் நோக்கமாகும். அதற்காக விமானத் தாக்குதல்கள், குறிப்பாகக் குடியிருப்புகள் மீது அதிகமாக நடைபெறுகின்றன. காலம் கனியும்போது பற்றிப்பிடிப்பதுதான் அதன் நோக்கம். அதுவரை உலக நாடுகளின் நாடி பிடித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றது ரஷ்யா.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ரஷ்யாவின் எண்ணெய் ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப் போவதாகவும் அறிவித்திருப்பதால், இதைச் சில ஐரோப்பிய நாடுகள் விரும்பவில்லை. காரணம் அனேகமான ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவில் இருந்துதான் ஒரு பகுதி எண்ணெய்யைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் 40 வீதமான எண்ணெய்யை ரஷ்யாவிடம் இருந்தே பெறுகின்றன. எண்ணெய் ஏற்றுமதியை அமெரிக்கா தடுத்தால், ஜெர்மனிக்கான எரிவாயுவைத் தடை செய்யப் போவதாக ரஷ்யா அறிவித்திருக்கின்றது. இதனால் எதிர்பாராமல் கச்சா எண்ணெய் விலை 130 டொலரால் விலை உயர்ந்தது. உக்ரைன் - ரஷ்யா பிரச்னை காரணமாக, மேற்கு நாடுகளில் புகழ்பெற்ற உணவகங்களான மக்டொனால்ஸ், ஸ்ராபக்ஸ், கொக்காகோலா போன்றவை தங்கள் சேவையை ரஷ்யாவில் நிறுத்தி வைத்திருக்கின்றன.

18 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்டவர்களை நாட்டை விட்டு வெளியேற வேண்டாம் என் உக்ரைன் அறிவித்திருக்கின்றது. தாய் மண்மீது கொண்ட பற்றினால் உக்ரைன் அழகுராணியாகத் தெரிவு செய்யப்பட்ட 24 வயதான அன்ஸதேசியா என்ற மிஸ் உக்ரைனும் இராணுவத்தில் இணைந்து போராடச் சென்றிருக்கின்றார். இன்னுமொரு தளத்தில் உக்ரைன் இராணுவத்தில் இணைந்த காதலர்களான லெசியாவுக்கும் வலேரிக்கும் சக இராணுவ தோழர்கள் சென்ற வாரம் திருமணம் செய்து வைத்தனர். ஒரு பக்கம் தாக்குதல்கள் நடந்து கொண்டிருக்க, இவர்கள் தளத்தில் நின்றதால், இராணுவ உடையிலேயே அவர்களது திருமணம் நடந்தேறியது.

உக்ரைன் அரசின் அவசர அழைப்பை ஏற்று வெளிநாடுகளில் வசித்த சுமார் 60,000 உக்ரேனியர்கள் இராணுவத்தில் இணைவதற்காக உக்ரைன் சென்றிருக்கிறார்கள். வெளிநாட்டவர்களும் இராணுவத்தில் இணைந்து கொள்ளலாம் என்ற உக்ரைன் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, உக்ரைனில் படித்துக் கொண்டிரந்த இந்தியா, கோவை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர் ஒருவர் உக்ரைன் இராணுவ உபபிரிவில் இணைந்து சேவையாற்றுகின்றார்.

மேற்குலக நாடுகள் ரஷ்யாவின் சொத்துக்களை முடக்கியதால் பங்குச் சந்தையிலும் ரஷ்யா வீழ்ச்சி கண்டது. ரஷ்யாவின் வர்த்தகம், மற்றும் தனிப்பட்டவர்களின் கொடுக்கல் வாங்கலையும் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை தடுத்து வைத்திருக்கின்றன. மற்றும் எண்ணெய், எரிவாயு போன்றவற்றுக்கான ரஷ்யாவின் வருமானத்தையும் இலகுவில் பெறமுடியாதபடி கடுமையாக்கி இருக்கின்றன. ரஷ்ய ஜனாதிபதி, மற்றும் வெளியுறவு அமைச்சர் ஆகியோரின் தனிப்பட்ட சொத்துக்களும் தடுத்து வைக்கப் பட்டிருக்கின்றன. ரஷ்யாவின் பெரிய பணக்கார முதலாளிகள் பிரித்தானியாவுக்கு வருவதையும் தடைசெய்திருக்கிறது பிரித்தானியா. இந்த நாடுகள் ரஷ்யாவில் இருந்து வரும் விமானங்களையும், வேறு நாடுகளில் இருந்து வரும் ரஷ்யர்கள் சார்ந்த விமானங்களையும் தங்கள் நாடுகளில் தரை இறங்குவதைத் தடுத்து வைத்திருக்கிறார்கள்.

இந்த யுத்தத்தை ரஷ்யா வேண்டுமானால் ஒரு வாரத்தில் முடித்திருக்கலாம். ரஷ்யா தன்னுடைய இராணுவப் பலத்தில் மிகக்குறைந்த அளவு சக்தியையே இது வரை உக்ரைன் மீது பாவித்திருக்கின்றது. ரஷ்யாவின் அதி நவீன விமானங்கள் ஒன்றும் இந்த யுத்தத்தில் இது வரை பாவிக்கப்படவில்லை. பொருளாதார ரீதியாக ரஷ்யாவை இந்த யுத்தம் பாதிக்கும் என்று தெரிந்தாலும், உக்ரைனுக்கு யாரெல்லாம் உதவிக்கு வருகிறார்களோ அவர்களும் பொருளாதாரத்தில் பாதிப்பு அடைய வேண்டும், காலம் கடத்தினால் அவர்களே தங்களுக்குள் அடித்துக் கொள்வார்கள் என்பதும் ரஷ்யாவுக்குத் தெரியும்.

எண்ணெய், எரிவாயுப் பிரச்சனையே எல்லா நாடுகளுக்கும் முக்கியமான பிரச்னையாக மாறப்போகின்றது. இருப்பில் உள்ள எரிபொருள் முடிவடையும்போது, என்ன நடக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்பதே சிறந்தது.

உக்ரைன் - ரஷ்ய யுத்தம் ஒரு பக்கம் போய்க் கொண்டிருக்க, மறுபக்கம் ஐ.நா.வின் ஜெனிவா நடவடிக்கைகள் சுவிட்சர்லாந்தில் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றன. வழக்கமாக மார்ச், ஏப்ரல் மாதங்களில் இந்த அமர்வு இடம்பெறுவதுண்டு. பல்வேறு பிரச்னைகளுக்கு மத்தியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை நிகழ்ச்சி சென்ற வாரம் நடைபெற்றது.

இலங்கையில் யுத்தம் முடிந்து 12 வருடங்கள் ஆகிய நிலையிலும் ஜெனிவாவில் எந்த ஒரு முன்னேற்றமும் இல்லாத நிலையில் இந்த நிகழ்ச்சி தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இம்முறையும் இலங்கைக்கு ஆதரவாக சில நாடுகள் தங்கள் கருத்தை வெளியிட்டிருந்தன. ஏற்கனவே இந்த நாடுகள் பற்றியும், அவர்கள் எந்தப் பக்கம் சாய்வார்கள் என்பதையும் தமிழ் மக்கள் அறிந்தே இருந்தனர். ஆகவே தமிழ் மக்கள் எதிர்பார்க்காதது ஒன்றும் புதிதாக நடந்தேறவில்லை. தமிழ் மக்களுக்கு ஆதரவாக ஜெனிவாவில் எது வுமே நடக்கப் போவதுமில்லை, காரணம் வல்லரசுகளான ரஷ்யாவும், சீனா வும் ஐ.நா.வில் வீட்டோ வாக்கை வைத்திருப்பதேயாகும். இதைவிட வட கொரியா, பெலாரஸ், சிரியா போன்ற நாடுகளும் இலங்கைக்கு ஆதரவாக இம்முறை நடந்து கொண்டன. காலத்தைக் கடத்துவதன் மூலம் ஆதாரங்களை அழிப்பது என்பதுதான் இவர்களின் முக்கிய நோக்கமே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை.


கியூபாவில் நடந்த அரசியல் மாற்றங்கள் ரஷ்யாவை விட்டு கியூபா விலகிச் செல்கிறதோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தி இருக்கின்றது. இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கிய அமெரிக்காவும், பிரித்தானியாவும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களைக் கொண்ட வரக்கூடாது என்று 2012 ஆம் ஆண்டு அமர்வில் கியூபா பிரதிநிதி குறிப்பிட்டிருந்தது நினைவிருக்கலாம். 2012 ஆம் ஆண்டு 24 நாடுகளும், 2013 ஆம் ஆண்டு 25 நாடுகளும், 2014 ஆம் ஆண்டு 23 நாடுகளும் இலங்கைக்கு எதிராக வாக்களித்திருந்தன. எந்தவொரு தீர்மானத்தையும் தோற்கடிப்பதற்கு 24 நாடுகளின் ஆதரவு வேண்டும். எந்த நல்ல விடயத்தை எடுத்தாலும் அரசியல் காரணங்களுக்காக வீட்டோ மூலம் சில நாடுகள் தடுத்துக் கொண்டே இருப்பார்கள் என்பதும் தெரிந்ததே!

ஒற்றுமையாக ஒன்றைச் செயற்படுத்த முடியாத நிலையில், முன்பு இருந்த ஆர்வம் இப்போது உள்ள தமிழ் அரசியல்வாதிகளுக்கும் இல்லை என்பதும் புரிகின்றது. பெரும்பான்மை இனத்தவர்கள் தங்குளுக்குள் முரன்படுவது போலக் காட்டிக் கொண்டாலும், சிறுபான்மையினரின் விடயங்களில் தங்களுக்குள் ஒன்றுபட்டே செயற்படுகின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மக்களின் மனத்திருப்திக்காகக் காலமெல்லாம், குறைந்தது வருடத்தில் இரண்டு தடவையாவது ஜெனிவாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே காலத்தை ஓட்ட வேண்டிய நிலையில்தான் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய நாம் இருக்கின்றோம்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் ஐ.நா. சபையில் எடுத்து வாதிட்டாலும் அதனால் எந்த ஒரு நன்மையும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. யார் பதவிக்கு வந்தாலும், இப்படித்தான் நடந்து கொள்வோம், இதுதான் அரசியல் என்ற நிலைப்பாட்டைத்தான் எல்லா அரசும் கொண்டிருக்கின்றன. இதனால் பிராந்திய ஆதிக்கம் செலுத்த விரும்பும் நாடுகளின் பிடியில் சிக்கி இலங்கை போன்ற சிறிய நாடுகள் அவதிப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன. கனடா போன்ற அரசியலமைப்பு இருந்தால் சிறுபான்மையினர் ஓரளவு பாதுகாக்கப்படலாம். எதுவாக இருந்தாலும் முடிவு எல்லாமே மனித மனங்களைப் பொறுத்ததுதான். ■

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

08. 


கீழுள்ள முக்கோண வடிவில் பக்கமொன்றின் எண்கள் மூன்றை கூட்டும் போது 18 வரக்கூடியதாக 4, 6, 10, 12 ஆகிய எண்களினால் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

(1) A - 12, B - 14, C - 4, D - 8

(2) A - 10, B - 12, C - 4, D - 6

(3) A - 10, B - 12, C - 6, D - 4

- **பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**

தேசம் நமது தெய்வம் - இதைத்
தெரிந்து கொள்ளும் தம்பி
பாசம் எல்லாம் கொட்டி - அதைப்
பாதுகாக்க வேண்டும்

பாட்டன், பாட்டி வாழ்ந்த - எங்கள்
பரம்பரைகள் வாழ்ந்த
நாட்டை வணங்க வேண்டும் - அதன்
நாமம் போற்ற வேண்டும்.

09. இக்கவிதை புலப்படுத்துகின்ற பிரதான கருத்து யாது?

(1) கடவுள் பக்தி (2) நாட்டுப் பற்று (3) பரம்பரைப் பற்று

10. இக்கவிதையில் வரும் **தேசம், பாசம், நாமம்** ஆகிய சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் முறையே

(1) பூமி, வாஞ்சை, திருமுகம்


(2) நாடு, விருப்பம், திலகம்

(3) நாடு, நேயம், பெயர்

11. அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகம். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?

(1) 41 (2) 42 (3) 43

12. ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.




அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?

(1) A (2) B (3) E

13. தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு தவறான விடையைத் தெரிவு செய்க.

**சுமதியின் வகுப்பில் உள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் பரதன் நன்றாகப் பாடும் திறமையைக் கொண்டிருந்தான்.**

(1) சுமதியை விட பரதன் நன்றாகப் பாட்டுப் பாடுவான்.

(2) பரதன் சுமதியின் வகுப்பில் கல்வி கற்கின்றான்.

(3) பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர்.

14. வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய விடையைத் தெரிக.

| | | | |
|---|---|---|---|
| H | G | F | E |
| P | | | M |
| I | | | L |
| A | B | C | D |

(1)


| | |
|---|---|
| N | O |
| K | J |

(2)

| | |
|---|---|
| O | N |
| J | K |

(3)

| | |
|---|---|
| N | O |
| J | K |

15. 

X Y

கடிகாரம் X முற்பகல் நேரத்தையும் கடிகாரம் Y பிற்பகல் நேரத்தையும் காட்டுகின்றது. எனின் இரு கடிகாரமும் காட்டும் நேரத்தின் வித்தியாசம் யாது?

(1) 3 மணித்தியாலம் 40 நிமிடங்கள்

(2) 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள்

(3) 12 மணித்தியாலம் 10 நிமிடங்கள்

## விடைகள்

| | | |
|---|---|---|
| 08. | (3) | A - 10, B - 12, C - 6, D - 4 |
| 09. | (2) | நாட்டுப் பற்று |
| 10. | (3) | நாடு, நேயம், பெயர் |
| 11. | (3) | 43 |
| 12. | (1) | A |
| 13. | (3) | பரதனின் வகுப்பில் உள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். |
| 14. | (2) | O N / J K |
| 15. | (2) | 15 மணித்தியாலம் 40 நிமிடங்கள் |

## கல்வி tv CHANNEL-1

**12.03.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**12.03.2022**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# கிழக்கு மாகாணத்துக்கு மட்டும் எதற்காக தனியான செயலணி?

## கேள்வி எழுப்புகிறார் ரவூப் ஹக்கீம்

கொழும்பு, மார்ச் 12

**கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரம் தனியான செயலணி அமைத்து அந்த பிரேதேசத்தில் தொல்பொருள் தொடர்பாக அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு இனத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கும் இந்த செயலணியுடன் பாதுகாப்புப் பிரிவினரும் செல்வதால் பிரதேச மக்கள் குழப்பமடைகின்றனர். அதனால் தொல்பொருள் தொடர்பாக அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இருந்தால் ஆரம்பமாக அந்த பிரதேச மக்களுடன் அது தொடர்பில் கலந்துரையாடவேண்டும். அத்துடன் அம்பாறை முள்ளிகுளம் பிரதேசத்தில் சிலை ஒன்றை வைப்பதற்கு எடுத்த முயற்சி கவலையளிக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பாக எதிர்க்கட்சி கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாறை மாவட்டத்தில் பாலமுனை பிரதேசத்தில் முள்ளிகுளம் என்ற மலைமேடு ஒன்று இருக்கிறது. அந்த இடத்துக்கு தேரர்கள் சிலரும் பாதுகாப்பு படையினர் சிலரும் வேறு சிலரும் சென்று திடீரென கட்டுமான வேலை ஒன்றை ஆம்பிக்க முற்பட்டபோது பிரதேச மக்கள் குழப்பமடைந்தனர்.

தொல்பொருள் திணைக்களம் அந்த இடத்தில் அகழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக வர்த்தமானி அறிவிப்பு இருப்பதாக இருந்தால் அது தொடர்பாக அந்த பிரதேச மக்களுடன் கலந்துரையாடவேண்டும். பிரதேச சபையுடன், பிரதேச செயலகத்துடன் கலந்துரையாடவேண்டும்.

அவ்வாறு இல்லாமல் திடீரென அந்த இடத்துக்குவந்து கட்டுமான வேலை ஆரம்பிக்கின்றனர். அந்த இடத்தில் சிலை ஒன்றையோ வேறு ஏதாவது ஒன்றை வைப்பதற்கு முயற்சிக்கின்றனர்.

அதேபோன்று இறக்காமம் பிரதேசத்தில் மாயக்கல்லி பிரதேசத்தில் பல வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தில் வேறு கட்டுமானம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. தொல்பொருள் திணைக்களம் குறித்த இடத்தில் அகழ்வு இருக்கின்றதா? அந்த இடம் வர்த்தமானி படுத்தப்பட்டிருக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய்ந்து அந்த பிரதேச மக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

அவ்வாறு தொல்பொருள் இருந்தால் இலங்கையர் என்ற வகையில் அதனை பாதுகாக்க நாங்களும் கடமைப்பட்டுள்ளோம். என்றாலும் அந்த பிரேதேசத்தில் கண்ணுக்கு காண்கின்ற தூரத்தில் ஒரு சிங்கள குடும்பம் இல்லாத நிலையில் இவ்வாறான கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எடுக்கும் முயற்சி தொடர்பில் கவலையடைகின்றோம். அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவேண்டும். இது தொடர்பாக மாவட்ட அதிபருக்கும் எமது எதிர்ப்பை தெரிவித்திருந்தோம். அவரும் விசாரணை மேற்கொள்ளவதாக தெரிவித்திருந்தார்.

அத்துடன் தொல்பொருள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு இருக்கும் திணைக்களம் அவர்களின் கடமையை வெளியாட்களுக்கு வழங்கமுடியாது. அதேபோன்று கிழக்கு மாகாணத்துக்கு தனியான செயலணி அமைக்கப்பட்டிருக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் மாத்திரம்தான் தொல்பொருள் இருக்கின்றதா? வேறு மாகாணத்தில் தொல்பொருள் இல்லையா? கிழக்கு மாகாணத்துக்கு மாத்திரம் தனியான செயலணி அமைத்து, அதில் ஒரு இனத்தை மாத்திரம் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை நியமித்துக் கொண்டு அந்த இடங்களுக்கு செல்கின்றனர்.

அவர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் இராணுவ பிரதானிகள் செல்கிறார்கள். இவ்வாறு ஒரு மதத்தை, இனத்தை மாத்திரம் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துவரும் அரசாங்கம் எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் போகின்றது-என்றார். (அ)

## 24 மணி நேரத்தில் சிக்கினான் திருடன்

அம்பாறை, மார்ச் 12

கல்முனையில் வீடு புகுந்து திருட்டில் ஈடபட்ட நபர் 24 மணித்தியாலங்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு, கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

கல்முனை வைத்தியசாலை வீதியில் வசிக்கும் ஒலுவில் துறைமுகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தரின் வீட்டிலேயே இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, குறித்த திருடன், மேசையில் இருந்த மணிபேர்ஸை திருடியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சிசிரிவி கமெராவின் உதவியுடன்,குறித்த நபர் நற்பிட்டி முனையில் வைத்து கைது செய்யப்பட்டார். (அ)



## கணினி வள நிலையம் மீளவும் திறந்து வைப்பு

திருமலை, மார்ச் 12

திருகோணமலை வலயக்கல்வி அலுவலகத்துக்குரிய கணினி வள நிலையம், வசதிகள் மேம்படுத்தப்பட்டு, கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்கவினால் மீள திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்வி பணிப்பாளர் எஸ். சிறிதரன் உட்பட அதிகாரிகள் மாணவர்களும் கலந்துகொண்டனர். இதற்காக 3.51 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

உயர்தரம் எழுதிய மாணவர்கள், பாடசாலைக் கல்வியை இடையிலே கைவிட்ட மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மொழித்துறை சார் பாடநெறிகளும் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற மகளிர் தின கௌரவிப்பு நிகழ்வு



மட்டக்களப்பு, மார்ச் 12

“நாடும் தேசமும் உலகமும் அவளே” என்ற தொனிப்பொருளில் சர்வதேச மகளீர் தின கொண்டாட்டம் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் தலைமையில் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் நேற்று முன் தினம் திகதி இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக காணி பிரிவிக்கான மேலதிக அரசாங்க அதிபர் நவருபரஞ்ஜினி முகுந்தன் கலந்து கொண்டார். மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி.வில்வரெத்தினம் சிவப்பிரியா, மண்முனை வடக்கு உதவிப் பிரதேச செயலாளர் திருமதி.எல்.பிரசந்தன், பிரதேச செயலக கணக்காளர் ,உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், வர்த்தக தலைவர் , கிராமிய அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர், பொலிசார், பிரதேச மகளீர் அமைப்புகளின் உறுப்பினர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக ஊழியர்கள் என பலர் இதில் கலந்து கொண்டனர்.

சர்வதேச மகளீர் தினத்தினை முன்னிட்டு பெண்தொழில் முயற்சியாளர்களின் வர்த்தக கண்காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு அவர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதான அம்சமாக பெண்களுக்கு பெருமை சேர்க்கும் வண்ணம் சிறந்த ஆளுமை, புத்தாக்கம் மற்றும் சிறந்த தொழில் முயற்சி போன்ற விடயங்களில் சாதனை படைத்த மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலாளர் திருமதி. வில்வரெத்தினம் சிவப்பிரியா உள்ளிட்ட மூன்று சாதனைப் பெண்கள் இதன்போது கௌரவிக்கப்பட்டதுடன், சூரியா பெண்கள் அமைப்பினரின் விழிப்புணர்வு நாடகம் மற்றும் வில்லுப்பாட்டு என்பன ஆற்றுகை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## டீசல் தட்டுப்பாட்டினால் அறுவடைக்கூலி உயர்வு

திருமலை,. மார்ச் 12

திருகோணமலை - தோப்பூர் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக டீசல் விலை ஏற்றம் மற்றும் தட்டுப்பாடு காரணமாக, இப்பிரதேசத்தில் அறுவடை இயந்திரங்களுக்கான கட்டணம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் விசனம் தெரிவிக்கின்றனர். ஒரு மாதத்துக்கு முன்னர் மழையை நம்பிய நெற்செய்கை அறுவடையின் போது ஏக்கர் ஒன்றுக்கு 6,000 ரூபாய் வழங்கி நிலையில், தற்போது 9,000 ரூபாய் வழங்கி அறுவடை செய்வதால் அதிக நட்டத்தை எதிர்நோக்க நேரிடுவதாகவும் விளைச்சல் ஏக்கருக்கு 20 மூட் டைகளுக்கும் குறைவாகவே கிடைப்பதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். அது மட்டுமன்றி வயல் உரிமையாளர்களிடமே டீசலை பெற்றுவருமாறும் அறுவடை உரிமையாளர்கள் தெரிவிப்பதால், தோப்பூர் பிரதேசத்திலிருந்து பல கிலோமீற்றர் தொலைவிலுள்ள மூதூர் மற்றும் சேருநுவர பிரதேசங்களுக்குச் சென்று டீசல் பெறுவதற்காக சிரமப்படுவதாகவும் விவசாயிகள் விசனம் கூறினர். (அ)

# போர் தொடங்கி 12 நாட்களுக்குள் போர் குற்ற விசாரணை ஆரம்பம்!!

*லண்டன், மார்ச் 12*




ரஷ்யா உக்ரைன் மீது தொடுத்துள்ள போருடன் தொடர்புடைய குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் மிக வேகமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞர், போர் குற்றங்கள் தொடர்பாக ரஷ்ய அதிபர் புடின் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று அறிவித்திருக்கிறார். ஜேர்மனியிலும் உக்ரைன் போர் குற்றங்கள் தொடர்பில் தனியான விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

உக்ரைனில் 2014 முதல் ரஷ்யா புரிந்து வந்த போர் தொடர்பாகவும் தற்சமயம் இடம்பெறுவதாக நம்பப்படுகின்ற புதிய போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை உள்ளடக்கியும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் தலைமை வழக்கறிஞர் கரீம் ஹான் தெரிவித்திருக்கிறார்.


விசாரணைகள் எவ்வளவு கதியில் முன்னெடுக்கப்பட்டாலும் புடினை சர்வதேச நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்துவது சாத்தியமா என்ற முக்கிய கேள்வி இதில் உள்ளது. சாத்தியமான போர்க் குற்றங்களை அடையாளம் காண்பது உட்பட மேலும் பல சட்டச் சிக்கல்கள் தாண்டப்பட்ட பிறகே அனைத்துலக விசாரணை என்பது முன்னோக்கி நகர முடியும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

உக்ரைனின் மரியுபோல் நகரில் மகப்பேற்று மற்றும் சிறுவர் மருத்துவமனை ஒன்று சில தினங்களுக்கு முன்பு தாக்கப்பட்டுள்ளது. சிறுவர் உட்பட சிவிலியன் உயிரிழப்புகள் அங்கு ஏற்பட்டுள்ளன.

மருத்துவமனை மீதான தாக்குதலுக்கு ரஷ்யா மீது உக்ரைன் அதிபர் போர்க் குற்றம் சுமத்தியிருக்கிறார். இந்தத் தாக்குதல் தொடர்பான செய்திகளுக்கு மேற்குலக ஊடகங்கள் அதிக முக்கியத்துவம் அளித்து செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

இந்தத் தாக்குதலையும் இது போன்ற சிவிலியன்கள் மீதான வேறு சில குண்டு வீச்சுச் சம்பவங்களை யும் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களது பாவனையையும் போர்க் குற்றங்களாகக் கருதத்தக்கவையா என்பதை உறுதிப்படுத்தும் முயற்சிகளில் சட்ட நிபுணர்கள் ஈடுபட்டுவருகின்றனர். ஐசிசி என்கின்ற சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் 123 உறுப்பு நாடுகளில் 39 நாடுகள் உக்ரைன் போர்க் குற்றங்கள் குறித்து உட னடி விசாரணையைத் தொடக்கு மாறு கூட்டாகக் கேட்டுள்ளன.

இதேவேளை, ஜேர்மனியின் சமஷ்டி சட்டவாளர் அலுவலகமும் ரஷ்யா மீதான போர் குற்றங்கள் சார்ந்த விசாரணைகளைத் தொடக்கியுள்ளது என்ற தகவலை அந்நாட்டின் நீதி அமைச்சர் வெளியிட்டிருக்கிறார். ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான ஆயுத மோதலில் சர்வதேச சட்டங்களை மீறுகின்ற வகையில் குற்றங்கள் இடம்பெறு கின்றனவா என்பதை அறிவதற்கான கட்டமைப்பு விசாரணை ஒன்றை சமஷ்டி சட்டவாளர் ஆரம்பித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



### ரஷ்ய ஆக்கிரமிப்பு;

## கனடா-போலந்து கடும் கண்டனம்!

*வார்சோ, மார்ச் 12*

போலந்து விஜயம் செய்துள்ள கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, அந்நாட்டு ஜனாதிபதி ஆண்ட்ரேஜ் டுடாவை நேற்று முன் தினம் சந்தித்து உக்ரைன் விவகாரம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து பேசினார்.

உக்ரைனின் பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் சுதந்திரத்திற்கு எதிராக ரஷ்யாவின் தொடர்ச்சியான இராணுவ ஆக்கிரமிப்புக்கு பிரதமர் ட்ரூடோ மற்றும் ஜனாதிபதி டுடா ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

இந்தப் படையெடுப்பு உலகளவில் ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதலாக அமைந்துள்ளதாகவும், பிராந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகவும் இரு தலைவர்களும் கூட்டாக தெரிவித்தனர்.

இதேவேளை, மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் இராணுவ இருப்புக்கான தனது உறுதிப்பாட்டை புதுப்பிக்கும் கனடாவின் முடிவை பிரதமர் ட்ரூடோ மீண்டும் வலியுறுத்தினார்.

மேலும் ரஷ்யாவின் தொடர்ச்சியான ஆக்கிரமிப்புக்கு பதிலளிக்கும் விதமாக நேட்டோ அமைப்பின் ஒற்றுமையை ட்ரூடோ வலியுறுத்தினார்.

உக்ரைனில் இருந்து ரஷ்யா தனது இராணுவத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். உக்ரைனில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க அனுமதிக்க வேண்டும் எனவும் கனடா மற்றும் போலந்து தலைவர்கள் அழைப்பு விடுத்தனர்.

ரஷ்ய படையெடுப்பை அடுத்து உக்ரைனில் இருந்து தப்பியோடிய 10 இலட்சத்துக்கும் அதிகமான அகதிகளை வரவேற்ற போலந்து அரசாங்கம் மற்றும் மக்களின் குறிப்பிடத்தக்க முயற்சிகளை பிரதம மந்திரி ட்ரூடோ பாராட்டினார்.

அத்துடன், உக்ரைனில் பணிபுரிந்த 200 க்கும் மேற்பட்ட கனேடிய இராணுவத்தினரை போலந்துக்கு இடமாற்றம் செய்ததற்கு ஜனாதிபதி டுடாவுக்கு அவர் நன்றி தெரிவித்தார்.

உக்ரைன் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் முழு ஆதரவை வழங்கும் அதே வேளையில் ரஷ்யா மீதான பொருளாதார மற்றும் இராஜதந்திர அழுத்தங்களை தொடர்ந்து அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ரஷ்யாவைக் கண்டிக்கும் தீர்மானத்தை அண்மையில் நிறைவேற்றியதன் மூலம் உக்ரைன் மீதான ரஷ்யாவின் நியாயமற்ற மற்றும் வலிந்த ஆக்கிரமிப்புக்கு எதிராக வளர்ந்து வரும் சர்வதேச ஒருமித்த கருத்தை கனடா மற்றும் போலந்து தலைவர்கள் வரவேற்றனர்.

## மேரியோபோல் மருத்துவமனை மீது உக்ரைனே தாக்குதல் நடத்தியதாம்!

### ரஷ்யா குற்றச்சாட்டு

*மொஸ்கோ, மார்ச் 12*

உக்ரைன் - மேரியோபோல் நகரில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மீதான தாக்குதலை உக்ரைன் அரசே நடத்தியதாக ரஷ்ய இராணுவம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து உலகளாவிய கண்டனங்கள் ரஷ்யா மீது வெளியிடப்பட்டு வரும் நிலையில் மருத்துவமனை மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியதாக வெளியாகும் செய்திகள் போலியானவை என ஐ.நாவுக்ககான ரஷ்யாவின் முதன்மை துணை நிரந்தர பிரதிநிதி டிமிட்ரி போலியான்ஸ்கி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் நேற்று 16 ஆவது நாளாக நீடிக்கிறது. போரை நிறுத்த அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளும் ஐ.நாவும் அழைப்பு விடுத்துள்ளபோதும் அதற்கு செவி சாய்க்கப்படவில்லை.

இந்தப் போரில் இரு நாடுகளையும் சேர்ந்த பொதுமக்கள், இராணுவத்தினர் ஆயிரக்கணக்கில் உயிரிழந்துள்ளனர். போரை முன்னிட்டு பல்வேறு நாடுகளை சேர்ந்த இலட்சக்கணக்கானோர் உக்ரைனில் இருந்து பாதுகாப்பு தேடி வெளியேறி வருகின்றனர்.

இந்நிலையில் ரஷ்யப் படைகள் முக்கிய நகரங்களில் ஏவுகணை, வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களை நடத்தி வருகிறது. அதே நேரத்தில் ரஷ்யாவுக்கு உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது.

இந்தப் போரால் இதுவரை 20 இலட்சத்துக்கும் கூடுதலானோர் அகதிகளாக வெளியேறி உள்ளனர் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

இந்நிலையில் உக்ரைன் - மேரியோபோல் நகரில் உள்ள மகப்பேறு மற்றும் குழந்தைகள் மருத்துவமனை மீது நேற்று முன்தினம் ரஷ்யா வான்வழித் தாக்குதல் நடத்தியதில் மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் உட்பட குறைந்தது 17 பேர் காயமடைந்தனர். இந்த தாக்குதலை கண்டித்த உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி, இத்தாக்குதல் ஒரு போர்க்குற்றம் எனக் கூறினார். (அ)





## ஸ்கொட்லாந்து மருத்துவமனைகளில் அதிகரிக்கும் கோவிட் நோயாளர்கள்!

*லண்டன், மார்ச் 12*

ஸ்கொட்லந்து மருத்துவமனைகளில் கோவிட் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த 13 மாதங்களில் இல்லாத அளவு உச்சத்தை தொட்டுள்ளதாக அண்மைய புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த புதன்கிழமை சமீபத்தில் உறுதிப்படுத்தப்பட்ட கொவிட் தொற்றுடன் 1,636பேர் மருத்துவமனையில் இருப்பதாக தரவுகள் காட்டுகின்றன. இது இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் பதிவான 1,571 என்ற ஒமைக்ரோன் தொற்று உச்சத்தை விட அதிகமாகும்.

2021ஆம் ஆண்டு பெப்ரவரி 8ஆம் திகதி முதல் இதுவரை இல்லாத அளவுக்கு அதிகமான நோயாளிகள் மருத்துவமனையில் உள்ளனர்.

மொத்தம் 1,672பேர் மருத்துவமனையில் இருந்தனர். ஜனவரி 2021ஆம் ஆண்டு மருத்துவமனைகளின் எண்ணிக்கை 2,053ஆக உயர்ந்தது. (அ)

## ரஷ்யாவுக்கு எதிராக வெறுப்பு பதிவுகளை அனுமதிக்கிறது பேஸ்புக், இன்ஸ்டாகிராம்!

*நியூயோர்க், மார்ச் 12*

ரஷ்ய படையெடுப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் தலைவர்கள் மற்றும் ரஷ்யப் படையினருக்கு எதிரான வெறுப்பு பதிவுகளை சில நாடுகளில் வெளியிட பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் அனுமதி அளித்துள்ளது.

இதற்காக தனது வெறுப்பு பேச்சு தொடர்பான கொள்கைகளில் தற்காலிக மாற்றங்களை பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் தாய் நிறுவனமான மெட்டா மேற்கொண்டுள்ளது.




பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமின் இந்த வெறுப்பு பேச்சு தொடர்பான கொள்கை மாற்றங்களின் அடிப்படையில் உக்ரைன் மற்றும் போலந்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், பெலாரஸ் ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஷென்கோ தொடர்பான வெறுப்பு இடுகைகளுக்கு அனுமதி அளிக்கப்படும்.

இதேவேளை, கடந்த வாரம் முதல் ரஷ்யாவில் பேஸ்புக் நிறுவனத்திற்கு முழுமையாக தடை விதிக்கப்பட்டது. ரஷ்யாவுக்கு எதிராக பிரசாரம் செய்து வருவதால், அந்நிறுவனத்திற்கு எதிராக ஊடக ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

பேஸ்புக் நிறுவனம் ரஷ்யாவுக்கு எதிராக பாரபட்சமாக நடந்து கொள்கிறது. இதனை கூட்டாட்சி சட்டத்தை மீறிய செயலாக ரஷ்ய அரசு கருதுகிறது என ரஷ்யாவின் இணைய தணிக்கை நிறுவனம் வெளியிட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ)

ஈழநாடு



## மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணம்

# பரபரப்பான போட்டியில் தென்னாபிரிக்கா வெற்றி!

ஹமில்டன், மார்ச் 12

பாகிஸ்தானுக்கு எதிரான பரபரப்பான உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது தென்னாபிரிக்க அணி.

நியூசிலாந்தில் நடக்கும் மகளிருக்கான உலகக் கிண்ணத் தொடரில் நேற்று நடந்த போட்டியில் தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகள் மோதின.

பாகிஸ்தான் இதுவரை விளையாடிய இரு ஆட்டங்களிலும் தோல்வியடைந்து புள்ளிகள் பட்டியலில் கடைசி இடத்தில் இருந்தது. தென்னாபிரிக்க அணி முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்றிருந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி, களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

தென்னாபிரிக்க அணி, 50 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 223 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க வீராங்கனை லாரா 75 ஓட்டங்களும் அணித் தலைவி சுனே லுஸ் 62 ஓட்டங்களும்



எடுத்தார்கள். பாகிஸ்தானின் பாத்திமா சனா, குலாம் பாத்திமா தலா 3 விக்கெட்களை வீழ்த்தினார்கள்.

இலக்கைத் துரத்த ஆரம்பித்த பாகிஸ்தான் அணி தென்னாபிரிக்காவுக்கு அச்சுறுத்தலானது. 38ஆவது ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 144 ஓட்டங்கள் எடுத்து வலுவான நிலையில் இருந்தது.

இதன்பிறகு விரைவாக ஓட்டங்கள் எடுக்க முற்பட்டு விக்கெட்களை இழந்தது பாகிஸ்தான். ஒமைமா சொஹைல் 65 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். நன்கு விளையாடிய நிடா டர் கடைசிக் கட்டத்தில் ரன் அவுட் ஆனார்.

72 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பௌண்ட்ரிகளுடன் 55 ஓட்டங்களை எடுத்தார். கடைசி ஓவரில் வெற்றி பெற 10 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஆனால், 2 விக்கெட்களை இழந்து 6 ஓட்டங்களால் தோல்வியடைந்தது பாகிஸ்தான் அணி.

தென்னாபிரிக்காவின் ஷப்னிம் இஸ்மாயில் 3 விக்கெட்களை வீழ்த்தினார். இதுவரை விளையாடிய மூன்று போட்டிகளிலும் தோல்வியடைந்து புள்ளிகள் பட்டியலில் கடைசி இடத்தில் நீடிக்கிறது பாகிஸ்தான். உலகக்கிண்ணப் போட்டியில் தொடர்ச்சியாக 17 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. தென்னாபிரிக்க அணி 4 புள்ளி களுடன் புள்ளிகள் பட்டியலில் 3ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

## சம்பியன்ஸ் லீக் உதைபந்து;

# மன்செஸ்டர் சிற்றி, ரியல் மட்ரிட் காலிறுதி சுற்றுக்கு முன்னேறின!



மட்ரிட், மார்ச் 12

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் ரியல் மட்ரிட், மன்செஸ்டர் சிற்றி அணிகள் காலிறுதி ஆட்டத்துக்கு முன்னேறின.

முன்னதாக, 16 அணிகளின் சுற்றுப் போட்டியில் 2ஆவது பகுதி ஆட்டங்களில் பாரிஸ் சென். ஜெர்மைனை 3-1 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் அணி வெற்றி பெற்றது.

முதல் பகுதி ஆட்டத்திலும் 3-2 என்ற கோல் கணக்கில் ரியல் மட்ரிட் வென்றிருந்ததால், மொத்த மதிப்பீட்டு அடிப்படையில் அந்த அணி காலிறுதிக்கு முன்னேறியது.

மறுபுறம், ஸ்போர்டிங் - மன்செஸ்டர் சிற்றி அணிகள் மோதிய ஆட்டம் கோலின்றி சமநிலையில் முடிந்தது. எனினும், முதல் பகுதி ஆட்டத்தில் மன்செஸ்டர் சிற்றி 5-0 என்ற கணக்கில் வென்றதால் மொத்த மதிப்பீட்டின் அடிப்படையில் மன்செஸ்டர் சிற்றி காலிறுதிக்கு தகுதிபெற்றது. (ஐ)

# இந்திய இலங்கை டெஸ்ட் இன்று 100 வீத ரசிகர்களுக்கு அனுமதி!

பெங்களூர், மார்ச் 12

இந்தியா - இலங்கை அணிகள் மோதும் டெஸ்ட் தொடரில் பெங்களூர் டெஸ்டுக்கு 100 வீத ரசிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரு அணிகளுக்கிடையே மொஹாலியில் நடைபெற்ற முதல் டெஸ்டில் இந்திய அணி இனிங்ஸ் வெற்றியை அடைந்தது. இந்நிலையில் பெங்களூரில் இன்று பகலிரவு ஆட்டமாக 2ஆவது டெஸ்ட் நடைபெறுகிறது.

ஆரம்பத்தில் பெங்களூர் மைதானத்துக்கு 50வீத ரசிகர்களே அனுமதிக்கப்பட்டார்கள்.

எனினும், கொரோனா பாதிப்பு கடந்த சில நாள்களாக இந்தியா முழுக்க குறைவாக உள்ளதால் தற்போது 100 வீத ரசிகர்களுக்கு அனுமதி வழங்குவதாக கர்நாடக கிரிக்கெட் சங்கம் அறிவித்துள்ளது. மாநில அரசின் அனுமதி கிடைத்த பிறகு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. டெஸ்டுக்கான ஒருநாள் டிக்கெட்டுக்கு ரூ. 100 முதல் ரூ. 1250 வரை கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

முதல் இரு நாள்களுக்கு 10,000 ரிக்கெற்றுக்கள் விற்றுவிட்டன என்றும் கூடுதல் ரிக்கெற் விற்பனை நடைபெற்று வருகின்றது. (ஐ)



# ராஜஸ்தான் அணியின் பயிற்றுநராக மலிங்க!

சென்னை, மார்ச் 12

ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சு பயிற்றுநராக இலங்கையின் லசித் மலிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

2022 ஆம் ஆணடுக்கான ஐ.பி.எல் போட்டிகள் எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பமாகிறது. மொத்தம் 65 நாட்கள் நீடிக்கும் இந்த தொடரில் மொத்தம் 70 போட்டிகள் நடைபெறுகின்றன.

மொத்தம் 10 அணிகள் பங்குபற்றும் இந்தப் போட்டித் தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கே தற்போது, லசித் மலிங்க வேகப்பந்து வீச்சு பயிற்றுனராக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இங்கிலாந்து முந்தியது மேற்கிந்தியத் தீவுகள்!

அன்டிகுவா, மார்ச் 12

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மூன்றாவது போட்டியில் பொன்னரின் சதத்தால் மேற்கிந்தியத்தீவுகள் அணி முன்னிலை பெற்றுள்ளது.

இந்த இரு அணிகளும் மேற்கிந்தியத்த தீவுகளின் அன்டிகுவா நோர்த் சவுண்டில் டெஸ்ட் போட்டியில் மோதி வருகின்றன.

போட்டியின் மூன்றாம் நாளான வியாழக்கிழமை ஆட்டநேர முடிவின்போது மேற்கிந்தியத் தீவுகள் 9 விக்கெட்களை இழந்து 373 ஓட்டங்களை பெற்றிருந்தது.

மிகவும் பொறுமையுடன் 9 மணித்தியாலங்களுக்கு மேல் துடுப்பெடுத்தாடிய நிக்ருமா பொன்னர் 355 பந்துகளை எதிர்கொண்டு 12 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 123 ஓட்டங்களை சேர்த்தார்.

நான்கு விக்கெட்கள் இழப்புக்கு 202 ஓட்டங்களில் இருந்து தனது முதல் இனிங்ஸை 3ஆம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்த மேற்கிந்தியத் தீவுகள், முழுநாளும் நிதானத்துடன் துடுப்பெடுத்தாடி மேலதிகமாக 173 ஓட்டங்களை மாத்திரம் பெற்று இங்கிலாந்தை குழப்பத்தில் ஆழ்த்தியது.

மூன்றாம் நாள் ஆட்டத்தில் முதல் இரண்டு ஆட்ட நேர பகுதிகளில் ஜசன் ஹோல்டர் (45), ஜோஷுவா த சில்வா (32), அல்ஸாரி ஜோசப் (15) ஆகியோரின் விக்கெட்களை இங்கிலாந்து கைப்பற்றிய போதிலும் அதன் பின்னர் நீண்ட நேரத்துக்கு விக்கெட் விழவில்லை.

பொன்னர் - கெமர் ரோச் இணை 28.5 ஓவர்கள் தாக்குப்பிடித்து துடுப்பெடுத்தாடி இங்கிலாந்து பந்துவீச்சாளர்களை சோதித்தனர்.

கெமர் ரோச் 8ஆவது விக்கெட்டுக்காக 44 ஓட்டங்களைப் பகிர்ந்த பொன்னர், 9ஆவது விக்கெட்டுக்காக வீராசாமி பேர்மோலுடன் 27 ஓவர்களில் 46 பகிர்ந்து ஆட்டமிழந்தார். ஆட்ட நேர முடிவில் வீராசாமி பேர்மோல் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். கடைசி ஆட்டக்காரர் ஜேடன் சீல்ஸ் ஓட்டம் பெறாமல் இருந்தார். (ஐ)

# ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் வழமைபோன்று நடைபெறும்

## யாழ். மாவட்ட அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமானது, அதன் இணைத்தலைவர்களிடம் திகதி கோரப்பட்டு, வழமை போன்று கூட்டப்படும் என மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு, அந்தக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கம், மாவட்ட செயலாளருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

இந்த விடயம் குறித்து யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்ட மற்றும் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்களைக் கூட்டுமாறு, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கம், கடிதம் மூலம் எனக்கு அறியப் படுத்தியுள்ளார்.

பிரதமரின் இணைப்புச் செயலாளர் என்ற அடிப்படையில், அவர் இவ்வாறானதொரு கடிதத்தை அனுப்பியுள்ளார் என்று நான் கருதுகின்றேன்.

எவ்வாறிருப்பினும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவர்களான வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோரிடம் திகதி கோரப்பட்டு, அதற்கமைவே வழமைபோன்று கூட்டத்தைக் கூட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம், கூட்டம் தொடர்பான அழைப்பிதழ், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதமரின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள கீதநாத் காசிலிங்கத்துக்கும் அனுப்பப்படும் - என்றார். (அ)

# ஏப்ரல் மாதம் மின் கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சியடையும்

## சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 12

நிலக்கரி மின்சார உற்பத்தி நிலையங்கள் மற்றும் நீர்மின் நிலையங்களை இயக்குவதில் உள்ள தவறான முகாமைத்துவம் காரணமாக மார்ச் மாதம் இறுதியில் அல்லது ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் நாடளாவிய ரீதியில் மின் கட்டமைப்பு முழுமையாக வீழ்ச்சியடையும் என எதிரணி பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இதனை சமாளிக்க 50 வீதத்தினால் மின்சார கட்டணத்தை உயர்த்தவும், எரிபொருள்விலையை அதிகரிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் இன்றைய நெருக்கடியை அரசாங்கம் ஆழமாக விளங்கிக்கொள்ளாது சூழ்ச்சிகள், குழப்பகாரச் செயற்பாடுகள் என்ற விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

கடந்த ஜனவரி 4 ஆம் திகதி இலங்கையினால் ஆசிய கணக்குத்தீர்வு ஒன்றியத்துக்கு 500 மில்லியன் டொலர்களை செலுத்தவேண்டியிருந்தது.

அதனை இம்மாதம் நான்காம் திகதிக்கு வழங்கும் வகையில் பிற்போடப்பட்டிருந்தது. இரண்டு மாதங்கள் பிற்போடப்பட்டதால் மேலும் வட்டி அதிகரிக்கப்பட்டு 900 மில்லியன் அமெரிக்க டொலர்களாக செலுத்தவேண்டிய தொகை அதிகரித்துள்ளது.

அதனையும் செலுத்த மத்திய வங்கிக்கு திறன் இருக்கவில்லை. அதனை செலுத்தினால் நாடு வங்கரோத்து நிலைக்கு தள்ளப்பட்டிருக்கும். நாட்டின் சூழ்ச்சி இதுவேயாகும்.

ஆகவே சூழ்ச்சி என்றால் என்னவென்று தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் ராஜபக்ஷவினருக்கு கண்ணாடிக்கு முன்னாள் போய் நின்றால் தெரியும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் 600 மெற்றிக் தொன் டீசலே கையிருப்பு உள்ளது. நாளாந்த போக்குவரத்துக்கு மட்டுமே 5500 மெற்றிக் தொன் டீசல் தேவைப்படுகின்றது.

இவ்வாறான நிலையிலேயே நாடு இயங்கிக்கொண்டுள்ளது. தற்போது பெற்றோல் கப்பல் ஒன்றும் இலங்கைக்கு வந்துள்ளது, 37 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் துறைமுகத்தில் உள்ளது.

இவற்றை பெற்றுக்கொள்ள 35 மில்லியன் டொலர்களையே செலுத்தவேண்டும். ஆனால் இன்றுள்ள நிலையில் எம்மால் 52 மில்லியன் டொலர்களை செலுத்தியே பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது.

இலகுவாக கூறுவதென்றால் ஒரு லீற்றர் டீசலுக்கு பொதுமக்கள் மேலதிகமாக 60 ரூபா செலுத்தவேண்டியுள்ளது.

இதுவே அரசாங்கத்தின் தவறான முகாமைத்துவமாகும். நிதி முகாமைத்துவ தவறு காரணமாக ஒரு டீசல் கப்பலில் உள்ள டீசலை இறக்க 345 கோடி ரூபா மேலதிகமாக செலுத்த வேண்டியுள்ளது.

இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் இல்லாத காரணத்தினால்தான் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றதே தவிர இது சூழ்ச்சி அல்ல. பிரதான மின் உற்பத்தி நிலையங்களை ஜூலை மாதம் வரையிலே இயக்க முடியும். இதனை தவிர்க்க வேண்டும் என்றால் உடனடியாக நிலக்கரி இறக்குமதி செய்ய வேண்டும்.

ஒக்ரோபர் மாதம் வரையில் மின்சார உற்பத்தி நிலையங்களை கொண்டு செல்ல ஒரு மில்லியன் மெற்றிக்தொன் நிலக்கரி தேவைப்படுகின்றது.

ஆனால் அதனை பெற்றுக் கொள்ள டொலர் இல்லை. இலங்கைக்கு தேவையான நிலக்கரியை ரஷ்யாவில் இருந்து பெற்றுக்கொள்ளவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் ரஷ்யா -உக்ரேன் மோதல் காரணமாக எம்மால் அங்கிருந்து நிலக்கரியை பெற்றுக்கொள்ள முடியாது. ஜூலை மாதத்தில் இருந்து மின்சார உற்பத்தி நிலையங்கள் முடங்கினால் நாட்டின் நிலைமை மிக மோசமானதாக அமையும். அதே போல் நீர்மின் உற்பத்தியில் மிக மோசமான முகாமைத்துவம் கையாளப்படுகின்றது.

இப்போதே இதனை சரியாக முகாமைத்துவம் செய்யவில்லை என்றால் மார்ச் மாதம் இறுதியில் அல்லது ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் முழுமையான மின் கட்டமைப்பு வீழ்ச்சியடையும். அதேபோல் இப்போது மின்சார துண்டிப்பினால் இலங்கை மின்சார சபைக்கு கிடைக்கும் சேமிப்பை போன்று பத்து மடங்கு நட்டம் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படுகின்றது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இதனை சமாளிக்க 50 வீதத் தினால் மின் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதேபோல் ஏற்பொருள் விலையை அதிகரிக்க மத்திய வங்கி அறிவுறுத்தியுள்ளது. இவ்வாறு தீர்மானம் எடுக்க எவருக்கும் அதிகாரம் இல்லை. வங்கிகள் இவ்வாறு தீர்மானம் எடுக்க முடியாது.

இவை ஒரு சில மாதங்களில் தீர்வு காணும் பிரச்னைகள் அல்ல.

இலங்கை பெற்றுக்கொண்டுள்ள வெளிநாட்டு கடன்களில் 43 வீதமானவை சர்வதேச பிணைமுறிகளாகும். இப்போது அவற்றை நாம் நிறுத்தினாலும் கூட 2030 ஆம் ஆண்டு வரையில் அதற்கான வட்டி செலுத்தியாகவேண்டும்.

இன்றைய நிலையிலில் கடன் நெருக்கடி மேலும் பல காலத்திற்கு இழுத்தடிக்கப்படும். வெறுமனே டொலர் பிரச்னைகள் பற்றி பேசுகின்றனர், ரூபாவில் பாரிய நெருக்கடி நிலையொன்று ஏற்பட்டுள்ளது.

ரூபாவின் தட்டுப்பாடு காரணமாக பிரதான இரண்டு வங்கிகள்வீழ்ச்சியடையும்நிலையொன்று ஏற்பட்டுள்ளது-என்றார். (அ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 - 03 - 1948



மறைவு
08 - 03 - 2022

## திருமதி ரேவதி தர்மலிங்கம்

யாழ். வடமராட்சி கல்லுவத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட ரேவதி தர்மலிங்கம் அவர்கள் 08.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான பரமசாமி - அழகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற தர்மலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும்,ரகுதரன், ரவிதரன், றதி, சகிதா, சுகந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும்,ஜெயந்தி, சுசிதா, நகுலதாஸ், சசிசேகரன், திருக்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான அரசம்மா, மகேந்திரம் மற்றும் சுகிர்தராணி, திருநாமராஜா, பரமகுருநாதன், கருணாகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும்,மகேஸ்வரி, தர்மகுலசிங்கம், சரஸ்வதி, வசந்தி, குலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும்,காலஞ்சென்றவர்களான செல்லமுத்து, நாகரத்தினம், துரைசிங்கம், நடராசா மற்றும் ஐயாத்துரை, செல்லக்கண்டு, கனகசுந்தரம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும்,ருகானா, ரிசாந், அசாந், திவ்யன், அர்ச்சுன், அதிஸ், அபிரா, ஆதிரி, ஆதவன், ஆதிரேயன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.03.2022 திங்கட்கிழமை அன்று மாலை 6.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்ற இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு, 15.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று காலை 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம்பெற்று, 15.03.2022 செவ்வாய்க்கிழமை அன்று நண்பகல் 1.00 மணியளவில் Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada என்ற இடத்தில் தகனம் செய்யப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**ரகுதரன் (மகன்) - 0016472327909**
**ரவிதரன் (மகன்) - 0014163197507**
**சுகந்தினி (மகள்) - 0016477842440**

**தகவல் : குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 01 - 1952



மறைவு
08 - 03 - 2022

## அந்தோனியப்பு சில்வேஸ்ரர்

### (பெரியவன் அண்ணாவியார்)

பாஷையூரைப் பிறப்பிடமாகவும்,கனடா Montreal ஐ வதி விடமாகவும் கொண்ட அந்தோனியப்பு சில்வேஸ்ரர் அவர்கள் 08.03.2022 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற கபிரியேல் அந்தோனியப்பு - மாட்டினம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற கபிரியேல் ஞானப்பிரகாசம் - அந்தோனியம்மா(பூமணி) தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிசிலியா (பொன்மலர்) அவர்களின் பாசமிகு கணவரும், ரொறிங்ஸ்ரன்(உதயராஜ்- கனடா), ரொறிங்ஸ்ரெலா (உதயநிலா- பாஷையூர்), எலிங்ரன்(ஜெயராஜ்- லண்டன்), அன்ரன் திலகராஜ் (கனடா),பெனிஸ்ரெலா(சர்மிலா- கனடா) ஆகியோரின் பாசமிகுதந்தையும், றஜி(கனடா),நியூட்டன்(பாஷையூர்), நிரோசி (லண்டன்), சுபிதா(கனடா),வின்சன்(கனடா) ஆகியோரின் பாசமிகுமாமனாரும்,பெவிற்ரா(பிரான்ஸ்),றெச்சீஸ்(பாஷையூர்),பற்றிமா(பாஷையூர்), ஜான்சன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகுசகோதரரும், அலெக்ஸ், ஆம்ஸ்ரன்,அரிஸ், ஸ்ரெபான், ஸ்ரெனோ, ஜெனுசன், ஜெத்றோ, ஜேடன்,சமினா, அக்ஷயன்,அபிஷயன், ஆர்ஷயன் ஆகியோரின் பாசமிகுபாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கஆராதனைபற்றியவிபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**உதயராஜ் (மகன்) - 0015144023451**
**ஜெயராஜ் (மகன்) - 00447983408828**
**வின்சன் (மருமகன்) - 0015149674667**
**திலகராஜ் (மகன்) - 0015148064667**

**தகவல் : குடும்பத்தினர்.**

## பாண்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதையடுத்தே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி 450 கிராம் பாண் ஒன்றின் விலை 20 தொடக்கம் 30 ரூபா வரையில் அதிகரிக்கப்படுவதுடன், பணிஸ் ஒன்றின் விலையானது பத்து ரூபாவால் அதிகரிக்கப்படுகிறது.

மேலும் பேக்கரி உற்பத்திப் பொருட்களுக்கான மூலப்பொருட்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளதால் ஆயிரக்கணக்கான சிறிய பேக்கரிகள் மூடப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய பேக்கரிகளின் உரிமையாளர்கள் கடும் சவாலுக்கு முகங்கொடுத்து வருகின்றனர் - என்றார். (அ)

## மீண்டும்...

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால் மாவின் விலை 300 ரூபாவால் அதிகரிக்கப்படும். 400 கிராம் பால்மா பக்கெற் ஒன்றின் விலை 120 ரூபாவால் அதிகரிக்கப்படும்.

இது தொடர்பில் நிதியமைச்சு மற்றும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## மருந்துகளின்...

உற்பத்திகள் , விநியோக ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, இலங்கையில் உளவியல் ஆலோசனைகள் / உளவியல் சிகிச்சையாளர்களை ஒழுங்குறுத்தல்கள் பற்றிய விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை கூறினார்.

## விலை...

ரூபாயாலும், பிறீமா நிறுவனம் 40 ரூபாயாலும் அதிகரித்துள்ளன.

இதைத் தொடர்ந்து, ஒரு இறாத்தல் பாண் 20 முதல் 30 ரூபாயாலும், பணிஸ் ஒன்றின் விலை 10 ரூபாயாலும், மதிய நேரத்துக்கான உணவுப் பொதி ஒன்று 20 ரூபாயாலும். கொத்து ரொட்டியின் விலை 10 ரூபாயாலும், துரித உணவு வகைகள் 5 முதல் 10 ரூபாயாலும் உயர்த்தப்பட்டுள்ளன.

இதேசமயம், மருந்துப் பொருட்களின் விலையை 29 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. எரிபொருட்களின் விலையை ஒரு லீற்றர் டீசலின் 75 ரூபாயாலும், பெற்றோலின் விலை 50 ரூபாயாலும் அதிகரித்து அறிவித்துள்ளது லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம்.

ஒரு கிலோ கிராம் பால் மா பைக்கெற்றின் விலை 300 ரூபாயாலும் 400 கிராம் பைக்கெற்றின் விலை 120 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

முச்சக்கர வண்டியின் முதல் கிலோ மீற்றருக்கான கட்டணம் 80 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இதனிடையே, ஆகக் குறைந்த பஸ் கட்டணம் 30 ரூபாயாக நிர்ணயிக்கப்பட வேண்டும் என்றும் 30 வீதத்தால் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்றும் பஸ் நிறுவனங்களின் சம்மேளம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இதேசமயம், கைபேசிகளின் விலைகள் 30 வீதத்தாலும், விமான பயணச் சீட்டுக்களின் விலை 27 வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ளன. இவ்வாறு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்கள் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளமையால் மக்களிடையே ஒருவித அச்சநிலையும் அதிருப்தியும் உருவாகியுள்ளன. இதனால், நாடு முழுவதும் ஒரு நெருக்கடி நிலை உருவாகியுள்ளது. (ஐ)

## பா.ஜ.க...

எம். ஏ. சுமந்திரன் எம். பி. பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் கே. அண்ணாமலையை சந்தித்துப் பேசினார்.

எட்டாவது ஆண்டாக நடைபெறவுள்ள உலகத் தமிழ் வம்சாவளி ஒன்றுகூடல் நிகழ்வுக்காக சுமந்திரன் எம். பி. தமிழகம் சென்றுள்ளார்.

அங்கு சென்றுள்ள அவர், நேற்று வெள் ளிக்கிழமை மாலை பாரதிய ஜனதா கட்சியின் தமிழக மாநில தலைவர் கே. அண்ணாமலையை சந்தித்துப் பேசினார்.

இதன்போது, இலங்கை தமிழர்களுக்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி முன்னெடுத்துள்ள முயற்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் குறித்து பேசப்பட்டன என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார். (ஐ)

## சுமந்திரனுக்கு...

உள்ளது.

இந்து மக்கள் கட்சியின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கிறிஸ்தவ மத மாற்ற முகவரான சுமந்திரன் இலங்கை தமிழர்களின் பிரதிநிதியாக தமிழக அரசை சந்திக்க வருகை தருவதை எதிர்த்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாக அந்தக் கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் சென்னையில் நடக்கும் உலக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றுகூடலுக்காக சுமந்திரன் எம். பி. தமிழகம் சென்றுள்ளார். இந்தக் கூட்டத்திற்கு இலங்கையிலிருந்து இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான க. வி. விக்னேஸ்வரன், சுரேன் ராகவன், வி. இராதாகிருஷ்ணன் ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உணவுப்...

அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எரிபொருட்களின் விலை சடுதியாக அதிகரித்தன் காரணமாக, இந்த விலை அதிகரிப்பு நடைமுறைக்கு வரவுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## விலை...

ரூபாயாகவும், ஒரு லீற்றர் சுப்பர் டீசலின் விலை ஒரு லீற்றர் 254 ரூபாயாகவும் அதிகரிக்கப்படவுள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்மொழிவுக்கு அமையவே இந்த விலையுயர்வுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பஸ்...

நிறுவனங்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்தார்.

மேலும், அரசாங்கம் டீசல் மானியம் வழங்கினால் மட்டுமே பஸ் கட்டணத்தை மாற்றாமல் தொடர்ந்தும் இருக்க முடியும் என்றும் அவர் கூறினார். (ஐ)

## கோதுமை...

மாற்றம் நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வரும் என்று அந்த நிறுவனம் தெரிவித்தது.

இதேவேளை, ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 35 ரூபாய் முதல் 45 ரூபாய் வரை அதிகரிக்கப்படும் என்று பிறிமா நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ)

# சகல மாணவர்களுக்கும் திங்கள் முதல் பாடசாலை!

கொழும்பு, மார்ச் 12

அரச மற்றும் அரச அனுசரணையில் இயங் கும் தனியார் பாடசாலை கள் அனைத்தும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அனைத்து மாணவர்களையும் பாடசாலைக்கு அழைக்குமாறு கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பிலான சுற்றுநிருபம் கல்வி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மாணவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு மாணவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

கோவிட் 19 தொற்று நிலைமையின் மத்தியில், பாடசாலைகளை இயக்குவதில், ஏதேனும் சிக்கல் தோன்றினால், வலயக் கல்வி பணிப்பாளரின் அனுமதியின் பேரில் தேவையான அடுத்தகட்ட நடவடிக்கைகளை எடுக்க முடியும் என்று அமைச்சின் செயலர் பேராசிரியர் கபில பெரேரா அறிவித்துள்ளார். (ஐ)

# வவுனியா விபத்தில் முதியவர் உயிரிழப்பு!

வவுனியா, மார்ச் 12

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இந்த நிலையில், விபத்தை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் இராணுவ வாகனம் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

வவுனியா செட்டிக்குளம் வீதியில் பாரதிபுரம் 50 வீட்டுத் திட்டப் பகுதியில் நேற்று மதியம் இந்த விபத்து இடம்பெற்றது.

பெண் ஒருவரின் மோட்டார் சைக்கிளும் முதியவரின் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளாகின. இதன்போது, முதியவர் வீதியில் விழுந்துள்ளார். அந்தச் சமயம் பின்னால் வந்த இராணுவ வாகனம் முதியவரின் தலையில் ஏறியுள்ளது. இதில் முதியவர் தலை நசுங்கி அந்த இடத்திலேயே உயிரிழந்தார். (ஐ)

## ஜனாதிபதி...

தற்போது பேச்சுக்கு செல்வது அரசாங்கத்தை பிணையெடுப்பதற்கு சமமாகும். சிக்கல்களில் இருந்து தங்களை விடுவிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்த நாங்கள் இடமளிக்க முடியாது. எமது மக்களுக்காக இந்தியாவும் சர்வதேசமும் நாங்களும் எடுத்துவரும் முயற்சிகளுக்கு பின்னடைவாக அமைந்துவிட ஒருபோதும் இடமளித்துவிடக்கூடாது." என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு தமிழீழ விடுதலை இயக்கத்தின் அரசியல் குழுக் கூட்டத்தில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களுக்கு பின்னரே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் அழைப்பை ஏற்பதில்லையென்ற முடிவு எட்டப்பட்டதாகவும் கூறியுள்ள அவர், அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவித்த முக்கிய அம்சங்கள் வருமாறு,

"இலங்கை அரசாங்கத்தோடு பேச்சு நடத்த வேண்டியது அவசியம் என்பதை ஏற்றுக் கொண்ட பொழுதிலும் இந்த நேரத்திலே அரசாங்கம் எம்மை அழைத்து இருப்பதென்பது எங்களை ஒரு பகடைக் காயாகப் பாவித்து சர்வதேச மற்றும் உள்ளக அரசியல் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நடவடிக்கையாக அமைந்துவிடும் என்று நாங்கள் கருதுகிறோம்.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்னை இல்லை பொருளாதாரப் பிரச்னையே இருக்கின்றது என்று ஐ. நா. வரையில் ஜனாதிபதியும் மற்றும் பல இடங்களில் அவர் சார்ந்தோரும் தெரிவித்து வருகிறார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்னை உண்டு என்பதையும் அதற்கான தீர்வு அவசியம் என்பதையும் ஜனாதிபதி தனது நிலைப்பாடாக வெளிப்படுத்துவது அவசியம் என நாம் கருதுகிறோம்.

அரசாங்கம் பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமை ஆகிய விடயங்களில் அரசாங்கம் எந்தவித அக்கறையும் செலுத்தாமல் செயல்பட்டு வருகிறது. கடந்த ஐ. நா. மனித உரிமை பேரவை அமர்வில் மனித உரிமைக்கான உயர்ஸ்தானிகர், இலங்கை அரசாங்கம் மனித உரிமை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் பாரிய பின்னடைவை சந்தித்து வருகிறது என்று தெரிவித்து இருப்பதோடு சர்வதேச நீதிப் பொறிமுறையின் முன் இலங்கையை பாரப்படுத்துமாறு மனித உரிமை பேரவை அங்கத்துவ நாடுகளுக்கு வலியுறுத்தியிருக்கிறார். எமக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் நாடுகளும் அந்த நிலைப்பாட்டிலே கவனம் செலுத்துகிறார்கள். குறிப்பாக இந்தியா, ஐ. நா. மனித உரிமைப் பேரவையின் நடந்து முடிந்த கூட்டத்தொடரில் காத்திரமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

தங்கள் தலைமையிலே தமிழ்தேசிய பரப்பில் செயலாற்றும் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்ட அனைத்து கட்சிகளும் ஒருமித்து அண்மையில் இந்தியாவிற்கு முன்வைத்த கோரிக்கைக்கு பின்னர் இந்திய தரப்பில் ஏற்பட்டிருக்கும் பாரிய மாற்றத்தை இது எடுத்துக்காட்டியுள்ளது. தமிழ் மக்களுடைய நியாயமான அபிலாசைகளை தீர்க்கக்கூடிய அரசியல் தீர்வு, பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமை விடயங்களிலும் இலங்கையை தாங்கள் வலியுறுத்துவதாக இந்தியா தெரிவித்திருப்பது எம்மக்களுக்கு நம்பிக்கை தரும் விடயமாக இருக்கிறது.

எமது மக்களின் பிரச்னைகள் சம்பந்தமாகவும் எமது இனப்பிரச்னை சம்பந்தமாகவும் முடிவுகளை எடுப்பதற்கு பல தடவைகள் நாங்கள் கோரிக்கைகளை விடுத்தும் எங்களை உதாசீனம் செய்த ஜனாதிபதி இன்று எங்களை அழைத்திருப்பதானது அவர்கள் முகம் கொடுத்து இருக்கக்கூடிய சிக்கல்களில் இருந்து தங்களை விடுவிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்த நாங்கள் இடமளிக்க முடியாது. அது எங்களுடைய மக்களும் எமது மக்களுக் காக இந்தியாவும், சர்வதேசமும், நாங்களும் எடுத்து வரும் முயற்சிகளுக்கு பின்னடைவாக அமைந்துவிட ஒருபோதும் இடமளித்து விடக்கூடாது என்பதில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம்.

இந்தப் பின்னணியில் நல்லிணக்க நடவடிக்கையாக அரசாங்கம் தமது தரப்பில் செயல்படுத்தக் கூடிய விடயங்களான காணி அபகரிப்பை முற்றாக நிறுத்துதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகள் உடனடி விடுதலை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான பதில் உட்பட, குறிப்பாக ஐ. நா. மனித உரிமைப் பேரவையின் பிரேரணையில் கூறப்பட்ட பல விடயங்களில் ஏதாவது ஒரு சில விடயங்களை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு காத்திரமான எமது மக்களுக்கு நம்பகத்தன்மையான சூழலை ஏற்படுத்துவதே பேச்சை முன்னெடுத்துச் செல்ல வழிவகுக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். அப்படிப்பட்ட நல்லிணக்க நடவடிக்கையை அரசாங்கம் நிறைவேற்றிய பின்னர் இந்த சந்திப்பில் கலந்து கொள்வது எமது இனத்துக்கு ஆதரவாக செயற்பட்டு கொண்டிருக்க கூடிய இந்தியா உட்பட சர்வதேச நாடுகளுடைய முயற்சிக்கு வலுசேர்த்து எமது மக்களுக்கு காத்திரமான அரசியல் தீர்வையும் நீதியையும் பெற்றுத் தருவதற்கு வழிவகுக்கும் என்று நம்புகிறோம் - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

## கண்ணீர் அஞ்சலி



**மாசிலாமணி குகப்பிரகாசம்**
**தோற்றம் : 1962.05.08**
**மறைவு : 2022.03.10**

**குகப்பிரகாசம் சுகுணா**
**தோற்றம் : 1966.01.29**
**மறைவு : 2022.03.10**

இருவரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னார்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**U.S. Hotel**
**நிர்வாகத்தினர்**

## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 30 - 11 - 1948



இறப்பு 07 - 03 - 2022

### திருமதி சதாசிவம் கமலாதேவி

(ஓய்வு பெற்ற உபதபால் அதிபர்)

யாழ். வடமராட்சி அல்வாயைப் பிறப்பிடமாகவும், கனடா Brampton ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் கமலாதேவி கடந்த 07-03-2022 திங்கட்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், நமசிவாயம் சதாசிவம் (ஓய்வுபெற்ற உபதபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும்,ரமேஸ்(பிரான்ஸ்), சசிகலா(வாசுகி- கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுஜித்தா(பிரான்ஸ்), ஜெயக்குமார்(கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், தெய்வேந்திரநாதன்(இலங்கை), சுசிலாதேவி(இலங்கை), மங்களதேவி (கனடா), ரவீந்திரன்(கனடா), றஞ்சினிதேவி(இலங்கை), காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, தபேந்திரநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும்,றம்ஜன், டனுஜன், நிதுஜா, அபிநயா, நேயா, அக்க்ஷயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 20 Mar 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**சசிகலா(வாசுகி) - மகள்**
**Mobile : +16476411430**
**ரமேஷ் - மகன்**
**Mobile : +33627992197**
**ஜெயக்குமார் - மருமகன்**
**Mobile : +14166025718**
**ரவி - சகோதரன்**
**Mobile : +16472800884**
**மங்களதேவி(பேபி) - சகோதரி**
**Mobile : +16479801960**
**தெய்வேந்திரநாதன்(நாதன்) - சகோதரன்**
**Mobile : +94771341893**
**ரஞ்சி - சகோதரி**
**Mobile : +94778691994**
**சுசிலாதேவி (பபா) - சகோதரி**
**Mobile : +94779334886**

தகவல் :
**குடும்பத்தினர்**





# ‘பொன் அணிகளின் போர்’ சென். பற்றிக்ஸ் முன்னிலை!

*யாழ்ப்பாணம், மார்ச் 12*

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு எதிரான கிரிக்கெட் போட்டியில் 35 ஓட்டங்களால் முன்னிலை பெற்றுள்ளது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி.

பொன் அணிகளின் போர் என்று வர்ணிக்கப்படும் சென். பற்றிக்ஸ் - யாழ்ப்பாணக் கல்லூரி அணிகளுக்கு இடையிலான பெருந்துடுப்பாட்டப் போட்டி நேற்று ஆரம்பமானது.

105ஆவது போட்டியாக சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். பற்றிக்ஸ் கல்லூரியின் தலைவர் வெஸ்டின் முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார்.

இதனால், முதலில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 57.4 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்த அந்த அணி 98 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், பிருந்தன் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். கீதவற்சன் 16 ஓட்டங்களையும், பிரதீப் 13 ஓட்டங்களையும் எடுத்தனர்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி சார்பில் அசத்தலாக பந்து வீசிய அணித் தலைவர் வெஸ்டின் 19 ஓட்டங்களை மட்டும் கொடுத்து 6 விக்கெட்களை சாய்த்தார். சமுத்திகன், மதீசன், சாருஜன் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி நேற்றைய நாள் ஆட்டம் முடிவடைந்த போது 40 ஓவர்கள் நிறைவில் 133 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்களை இழந்திருந்தது.

அபாரமாக ஆடிய உப அதிரடியாக ஆடிய கீர்த்தன் 59 ஓட்டங்களை குவித்தார். சவுத்ஜன் 27 ஓட்டங்களையும் அணித் தலைவர் பெஸ்டின் 3 சிக்ஸர்களுடன் 24 ஓட்டங்களையும் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரியின் பந்துவீச்சில் பிருந்தன் 3 விக்கெட்களையும், சாந்துஷன், கீதவற்சன், மதீசன், நர்த்தனன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இன்று போட்டியின் இரண்டாம் மற்றும் இறுதி நாளாகும். காலை 9.20 மணிக்கு போட்டி ஆரம்பமாகும். (ஐ)

## இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

*கிளிநொச்சி, மார்ச் 12*

கிளிநொச்சி - இரணைதீவு கடற்பரப்பில் எல்லை தாண்டி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 8

இந்திய கடற்தொழிலாளர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 27ஆம் திகதி எல்லை தாண்டிய நிலையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த 8 இந்திய மீனவர்களை கைது செய்த கடற்படையினர், கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளதிணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

அதன்பின் குறித்த 8 இந்திய கடற்தொழிலாளர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் பாலசுப்ரமணியம் முன்னிலையில் முற்படுத்தப்பட்டதையடுத்து குறித்த 8 பேரையும் நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்வரும் திங்கட்கிழமை குறித்த இந்திய மீனவர்களை மன்றில் முன்னிலைப்படுத்துமாறும் அன்றையதினம் குறித்த வழக்குகளுக்கு குற்றச்சாட்டுப் பத்திரங்களைத் தாக்கல் செய்யுமாறும் கட்டளை இடப்பட்டுள்ளது. (அ)

## வடமராட்சி விபத்துகளில் 6 பேர் காயம்

*வடமராட்சி, மார்ச் 12*

வடமராட்சியில் மந்திகைக்கும் மாலிசந்திக்கும் இடையே பருத்தித்துறை வீதியில் இடம்பெற்ற விபத்தில் ஆறு பேர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று பிற்பகல் 4 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித் துறை நோக்கி சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியும் அதற்கு எதிர்த் திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து ஏற்பட்டது. இதில் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்.

இதேவேளை கொடிகாம் பருத் தித்துறை வீதியில் இடம்பெற்ற விபத் தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-2)







**பயிற்சி ஊடகவியலாளர்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் முன்னணி நாளிதழ் ஒன்றுக்கு பயிற்சி ஊடகவியலாளர்களாக இணைந்து கொள்ள விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் எதிர்பார்க்கப்படுகின்றது.



- **எழுத்துத்துறையில் ஆர்வமுள்ள**
- **துடிப்பும் துணிவும் உள்ள**
- **செய்தித்துறையில் விருப்புள்ள**
- **சாதிக்கும் எண்ணம் கொண்ட**

இளைஞர், யுவதிகள் இதில் இணைந்துகொள்ள முடியும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:**
**075 315 3153**
trainingjournalistjaffna@gmail.com

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.03.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**

*6.00 மணி* : பக்திப்பாடல்கள்
*6.30 மணி* : வணக்கம் டான்



*6.31 மணி* : தினம் ஒரு திருக்குறள்
*6.35 மணி* : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
*6.55 மணி* : இன்றைய பலன்
*7.05 மணி* : உளவியல் கருத்து
*7.15 மணி* : கதைவழி அறமொழி - யோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
*07.30 மணி* : பத்திரிகைகள் ஒரு பார்வை
*8.30 மணி* : காலை செய்திகள்
*9.00 மணி* : கலாட்டா காலை-நேரலை
*10.30 மணி* : TIK TOK



*11.00 மணி* : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு
*12.00 மணி* : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**

*1.00 மணி* : மழலைகள் நேரம்
*1.30 மணி* : WEEK END MOVIE- தாஜ்மஹால்
*04.30 மணி* : மனிதனின் மறுபக்கம்



*05.00 மணி* : அந்தி மந்தாரை
*6.00 மணி* : "எதுசரி எதுபிழை
*07.00 மணி* : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு
*07.30 மணி*: டான் சினி மரதன் குறும்பட போட்டி நிகழ்ச்சி
*8.00 மணி* : இரவுச் செய்திகள்
*09.00 மணி*: டான் பட்டிமன்றம்




*10.00 மணி* : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**

*6.00 மணி* : சிரி சிரி சிரி
*8.00 மணி* : சிரிப்பு சரவெடி
*10.00 மணி* : ஒரு பட கொமடி
*11.00 மணி* : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

*1.00 மணி* : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
*3.00 மணி* : குண்டக்க மண்டக்க
*5.00 மணி* : ஒரு பட கொமடி
*6.00 மணி* : கொமடி கலாட்டா

**இரவு**

*8.00 மணி* : ஒரு படக்கொமடி
*9.00 மணி* : சிரிப்போ சிரிப்பு
*10.00 மணி* : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**

*6.00 மணி* : பனிப்பூக்கள்
*7.00 மணி* : திசை எட்டும் இசை எட்டும்
*8.00 மணி* : வணக்கம் டான் மியூசிக்
*9.00 மணி* : மெல்லிசை
*10.00 மணி* : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

*12.00 மணி* : ராஜா ராணி
*1.00 மணி* : விசை இசை
*3.00 மணி* : வட்ஸ் அப் (நேரலை)
*4.00 மணி* : டீ டைம் ராகங்கள் (நேரலை)
*5.00 மணி* : இனிது இனிது
*6.00 மணி* : என்றென்றும் இசை
*7.00 மணி* : ஒய்வெடு நிலவே

**இரவு**

*8.00 மணி* : காற்றில் வரும் கீதம்
*9.00 மணி* : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**

*5.15 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*6.00 மணி* : தரம் 07 - தமிழ்
*6.45 மணி* : தரம் 08 - தமிழ்
*7.30 மணி* : தரம் 09 - கணிதம்
*8.15 மணி* : தரம் 10 - கணிதம்
*9.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
*10.00 மணி* : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
*11.00 மணி* : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

*12.00 மணி* : தரம் 06 - விஞ்ஞானம்
*1.00 மணி* : தரம் 07 - தமிழ்
*2.00 மணி* : தரம் 08 - தமிழ்
*3.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
*3.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*4.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
*5.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
*5.40 மணி* : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
*6.20 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

*7.00 மணி* : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**

*5.00மணி* : சிவாய மந்திரம்
*6.00 மணி* : சுப்ரபாதம்
*6.30 மணி* : சுப்ரபாதம்
*7.00 மணி* : இன்றைய சிந்தனை
*7.05 மணி* : இன்றைய நாள்
*7.20 மணி* : ஈழத்து சித்தர்கள்
*7.30 மணி* : மங்கள இசை
*8.00 மணி* : அருளுரை
*8.30 மணி* : திருவாசகம்
*9.00 மணி* : திருவிழா-01
*10.00 மணி* : பஜனை
*10.30 மணி* : தமிழககோவில் திருவிழா
*11.00 மணி* : பக்திமலர்

**பகல்**

*12.00 மணி* : திரையில் பக்தி
*12.30 மணி* : திருவிழா-02
*6.00 மணி* : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

*7.00 மணி* : செய்திகள்
*7.30 மணி* : அருளுரை
*8.00 மணி* : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**

*7.00 மணி* : நாளொரு நற்சிந்தனை
*8.00 மணி* : ஜெபமாலை
*9.30 மணி* : ஞானவழி (மறு ஒளிபரப்பு ஞாயிறு)
*10.00 மணி*: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
*10.30மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம்)
*11.30 மணி* : மறைக்கல்வி (மட்டக்களப்பு) ஞாயிறு

**பகல்**

*12.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*01.00 மணி* : திருப்பலி (மட்டக்களப்பு)
*03.00 மணி* : திருப்பலி (யாழ்ப்பாணம் மறு ஒலிபரப்பு)
*04.00 மணி*: திருப்பலி (மட்டக்களப்பு)
*05.00 மணி* : திருப்பலி (திருகோணமலை)
*06.00 மணி* :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
*06.00 மணி* : இயேசுவின் போதனைகள்
*07.30 மணி* : அன்பியம்( சனி மறுஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**

*6.00 மணி* : கிராத்
*7.00 மணி* : இறை சிந்தனை
*7.30 மணி* : இஸ்லாமிய பாடல்
*8.00 மணி* : கலந்துரையாடல்
*9.00 மணி* : இஸ்லாமிய சீரிஸ்
*10.00 மணி* : மனதோடு பேசலாம்
*10.30 மணி* : கண் வசண்ணம் கை வண்ணம்
*11.00 மணி* : சுவனப்பாதை
*11.30 மணி* : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

*12.00 மணி* : லுகர் அதான்
*12.30 மணி* : இஜ்லாமிய வரலாறு
*1.00 மணி* : இஸ்லாமிய திரைப்படம்
*2.00 மணி* : கஸீதா
*2.30 மணி* : இறை சிந்தனை
*3.00 மணி* : பாடல்கள்
*3.30 மணி* : பள்ளிவாசல் ஆவணப்படம்
*4.00 மணி* : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
*5.00 மணி* : இறை தென்றல்
*6.00 மணி* : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

*7.00 மணி* : பிறை பிரசங்கம்
*8.00 மணி* : இஸ்லாமிய வரலாறு